
"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

தை - மாசி - பங்குனி - 2024

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MSR GROUP
EST 2005

# MSR GROUP

Chartered Management Accountants

OUR SERVICES:

- Accounting & Business Services
- Tax Consultancy
- Tax Investigation
- Locums & Umbrella Payroll
- Property Consultancy
- Mortgages
- Pension & Investment
- Insurance
- Will & Probate Services

CELEBRATING 15 YEARS OF EXCELLENCE
2005 - 2020

The Parliamentary Review
BEST PRACTICE REPRESENTATIVE

Best Practice Representative Selected by Parliamentary Review

Head office:
MSR House, 329 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Regional office:
MSR Chamber, 349 Ley Street
Ilford
Essex
IG1 4AA

Contact:
T: 020 8514 2678
F: 020 8514 6963
E: office@msrgroup.org.uk
W: msrgroup.org.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலசம்
# KALASAM

மணி 32

ஒலி 109

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE



கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
சி அற்புதானந்தன்
சுதர்சினி வாகீசன்

விநியோகம்
சோ நிரஞ்சன்
சு இரத்தினராஜா

விளம்பரம்
நிருவாகம்
மா இந்துசேகரன்
வ இ இராமநாதன்

இலங்கைத் தொடர்பு
வை சிவனருட்செல்வர்
தொலைபேசி
0766167547
மின்னஞ்சல்
svarul@yahoo.co.uk

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com


# திறந்திருக்கும் நேரம்

உலகம் மிக வேகமாகப் போய்க்கொண்டு இருக்கிறது. போட்டிகள், பொறாமைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. பொருள் ஈட்டுவதிலும் புகழ் தேடுவதிலும் மட்டுமே மக்கள் பெரும்பாலும் நேரத்தைச் செலவிடுகிறார்கள். அதனால், சமயத்திலும் இறை வழிபாட்டிலும் ஈடுபட அவர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. தமக்கு ஏதாவது துன்பம், நோய் வந்தால் மட்டுமே கோயிலை நாடுகிறார்கள். சிலர் அதுவரை காத்திருப்பதில்லை. வேலைக்குப் போகும்போது அல்லது வீட்டுக்குத் திரும்பும்போது, கடைகளில் பொருள்கள் வாங்கிவிட்டு வீடு திரும்பும்போது வழியிலே கோயிலுக்கும் போகிறார்கள். அதனால், கோயில் எல்லா நேரங்களிலும் திறந்திருக்கவேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

சில கோயில் அறங்காவலர்களும் பக்தர்களுக்கு உதவுகிறோம் என்ற நோக்கில் கோயில்கள் எந்நேரமும் திறந்திருக்கவேண்டும் என எண்ணு கிறார்கள்; திறந்தும் வைத்திருக்கிறார்கள். வேறு சில இடங்களில் அர்ச்சகர் இல்லை, மக்கள் வருவதில்லை, ஒரே அர்ச்சகர் பல கோயில்களுக்குப் போகவேண்டும் என்ற காரணங்களால் கோயில்களை எப்போதும், (பூசைநேரம் தவிர) பூட்டியே வைத்திருக்கிறார்கள். இவை இரண்டுமே தவறான நடைமுறைகள்.

கோயில்கள் மக்களின் வழிபாட்டுக்கு உரிய இடங்கள். அங்கே சென்று வழிபடவும், பூசைகள் செய்யவும் விதிமுறைகள் உண்டு. அதன்படி பிற்பகல் சிறிதுநேரம் கோயில் பூட்டப்படவேண்டும். அந்த இரண்டு, மூன்று மணி நேரத்திலேதான் கடவுளை வழிபட்டு வரம்பெறவேண்டும் என்று கட்டாயம் இல்லை. மக்கள் அதை அறிந்து, அந்த நேரத்தைத் தவிர்த்து வழிபடச் செல்வதே முறை. அதற்கென்று நேரம் ஒதுக்கி ஆசாரமாகப் போவதே உசிதமானது.

அலுவலகங்களுக்கோ, மருத்துவரிடமோ குறித்த நேரத்திலேதானே போய்ப் பார்க்கிறோம். அப்படியாயின் நம்மை ஆளும் ஆண்டவனை நினைத்தவுடன் பார்க்கவேண்டும் என்பது என்ன நியாயம்? கோயில்கள் வழிபாடு செய்யும் இடங்களேயன்றி இருபத்துநாலு மணிநேரமும் திறந்திருப்பதற்கு அவை பொருள்கள் விற்கும் கடைகள் அல்ல.

க ஜெகதீஸ்வரன்
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த இதழில்


அப்பரின் அருங்கனி 03

கந்புராணம்காட்டும் சைவசமயச்சாரம் கந்தபுராணச் சிந்தனைகள் 05

திருவாசகம் இருக்கும் இடம் 07

திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும் 08

எது வாழ்க்கை? 12

பெரியபுராணத்தில் சைவநீதி 14

ஆடிப்பிறப்பும் ஆடிக்கூழும் 18

ஆலயமும் இசையும் 19

Saiva School of Hinduism 27

பாஞ்சாலி சபதம் 30

தாயுமானவர் சுவாமிகள் 33

திருப்பரங்குன்றம் பயணக்கட்டுரை 38

திருக்குறள் கதைகள் 39

ஆன்மிகத் துளிகள் 42


**அட்டைப்படம்: வடிவமைப்பு - குகன்**

**கலசம் இதழ் படித்தபின் அதை நண்பருக்கு அல்லது நூல்நிலையத்துக்குக் கொடுங்கள்**

**கட்டுரைகளில் உள்ள கருத்துக்களுக்குக் கட்டுரையாளரே பொறுப்பாவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பரின் அருங்கனி

- தில்லையூரான்



நாடி நாரணன் நான்முகன் என்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதம்என் நெஞ்சுள் இருக்கவே

திரு 5, பதி 1, பா 10

இந்த அப்பர் சுவாமிகளின் தேவாரத்தைச் சித்தாந்த நோக்குடன் பார்க்கும்போது சில கருத்துக்கள் என் மனதில் தோன்றுகின்றன.

நாரணனுக்கும் நான்முகனுக்கும் ஏன் சிவனின் அடிமுடியைக் காணமுடியாது போனது? படைத்தல், காத்தல் என்ற இரண்டில் எது பெரியது என்ற போட்டி ஏற்பட்டது. இரண்டும் சர்வேஸ்வரனால் அதிட்டிக்கப்பட்டது என்றும் அவனே அவற்றைச் செய்பவன் என்றும் அவர்கள் மறந்துவிட்டார்கள்.

உயிர்களின் வீழ்ச்சிக்குக் காரணம் அவர்களின் ஆணவச் செருக்குத்தான். இந்த ஆணவம், கன்மம், மாயை என்ற முக்குற்றமும் பாசம் என்றதில் அடங்கும்.

திருமந்திரத்தில்:

"பதியினைச் சென்றணு காபசு பாசம்
பதியணு கிற்பசு பாசம்நில் லாவே"

என்று கூறப்பட்டுள்ளது. எனவே பாசம் நீங்காதவரை "பதி"யைப் "பசு" அணுகமுடியாது. பாசத்தில் கன்மம், மாயை ஆகிய இரண்டும் ஒரு நிலையில் நீங்கினாலும் ஆணவமலம் உயிரைவிட்டு நீங்குவதில்லை. ஒளி உள்ள இடத்தில் இருள் மறைந்து இருப்பதுபோல் சீவன்முத்தி அடைந்தபின்பும் ஆணவம் ஆன்மாவைவிட்டு நீங்குவதில்லை. இது எதுபோல என்றால், சூரியன் உதித்தவுடன் விண்மீன்கள் தங்கள் ஒளியை இழக்கின்றன; சூரியன் அஸ்தமித்ததும் தங்களின் ஒளியை மீண்டும் பெற்றுக்கொள்கின்றன. ஆணவமலத்துக்கு அவ்வளவு சக்தி உண்டு. திருவருட் சக்தியின்றி ஆணவமலத்தின் சக்தியை எவ்வாறாலும் இல்லாமற் செய்யமுடியாது.

திருநாவுக்கரசர் சூலைநோயாற் பாதிக்கப்பட்டிருந்தபோது அவரின் தமக்கையாராகிய திலகவதியார் சிவனின் அருள்பெற்று அதைத் தீர்த்துவைக்க உதவினார். அந்தக் கணத்திலிருந்து சிவன் திருப்பாதம் நாவுக்கரசர் உள்ளத்தில் நிலையாகப் பதிந்துவிட்டது. இதனால் நாம் அறியக்கிடப்பது என்னவென்றால் அவன் எங்கள் உள்ளத்திலிருந்து என்றும் நீங்கமாட்டான் என்பதே!

சிவஞானபோதம் 10ஆம் சூத்திரம், "அவனே தானே அந்நெறி ஏகனாகி இறைபணி நிற்க" என்கிறது. ஏகனாகி நிற்பதென்றால் அவனின் திருவடியோடு ஆன்மா அத்துவிதமாக ஒன்றி நிற்பது என்று பொருள். சீவன்முத்தராகிய திருநாவுக்கரசு நாயனாரின் உள்ளத்தில் சிவன் அத்துவிதமாக இருந்தான். நான் சிறுவனாக இருந்தபோது என் சிறியதகப்பனார் திருமுறைப் பாடல்களைத் தினமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராயணம் செய்வார். திருமுறைகளை ஓதுவதைத்தவிர வேறு எந்த வழிபாடும் அவர் செய்ததில்லை. அந்தத் திருமுறைகளின் மகத்துவத்தை அந்நேரம் நான் உணரவில்லை. இப்போதுதான் உணர்கிறேன். பொதுவாக, எல்லாத் திருமுறைப் பாடல்களும் ஆன்மிக முன்னேற்றத்துக்கு உகந்தவை. இருந்தாலும் திருநாவுக்கரசு நாயனாரின் திருப்பாடல்கள் அநுபவப் பிழிவு என்ற முறையில் பாராயணம் செய்ய மிக உகந்தவையாகத் தோன்றுகின்றன.

அவற்றுள்ளும் குறிப்பாக அவர் அருளிய திருத்தாண்டகங்கள் மிக மிக இனிமைதரும் திருப்பாடல்களாகும். அவற்றுள் எனது மனத்தை மிகவும் கவர்ந்த பாடலைக் கீழே தருகிறேன்.

அத்தாவுன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்
அருள்நோக்கில் தீர்த்தநீர் ஆட்டிக் கொண்டாய்
எத்தனையும் அரியைநீ எளியை ஆனாய்
எனையாண்டு கொண்டிரங்கி யேன்று கொண்டாய்
பித்தனேன் பேதையேன் பேயேன் நாயேன்
பிழைத்தனகள் அத்தனையும் பொறுத்தாய் அன்றே
இத்தனையும் எம்பரமோ ஐய ஐயோ
எம்பெருமான் திருக்கருணை இருந்த வாறே

திரு 6, பதி 95 பா 8

# ஆருத்திரா தரிசனம்

மார்கழி மாதம் என்றதுமே திருவெம்பாவை, திருப்பாவை ஆகியவை நினைவுக்கு வரும். மார்கழி மாதக்குளிரில் இலண்டனில் அதிகாலையில் எழுந்து நீராடிக் கோயிலுக்குப் போவ-தென்றால் ஒரு சோதனை தான். ஆனால், கோயிலுக்குப் போய்விட்டால் அதனால் கிடைக்கும் ஆனந்தமே அளப்பரியது.

சைவமுன்னேற்றச் சங்கத்தினர் நடத்திவரும் சிவகாமசுந்தரி உடனாய சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் நடக்கும் திருவெம்பாவைப் பூசை சிதம்பரத்தில் நடக்கும் விதிமுறைகளைப் பின்பற்றி நடக்கின்றது. அதனால் அது தனிச்சிறப்பு வாய்ந்தது. கடந்த மார்கழி மாதம் நடைபெற்ற ஆருத்திரா தரிசனத்தை முழுமையாகப் பார்த்து மகிழும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. பூசை தீபாராதனை எல்லாமே அற்புதமாக இருந்தன. அன்று பண்ணிசை வித்தகர் ஓதுவார் சாமி தண்டபாணி அவர்களால் திருப்பொற்சுண்ணப்பாடல் அழகாகப் பாடப்பட்டுச் சுண்ணம் இடிக்கப்பட்டது. இது பக்தர்களைப் பக்தி பரவசமாகச் செய்தது. இதுவரை இதனை நேரில் பார்க்காதவர்கள் நேரில் வந்து பார்ப்பது அவசியமாகும். அந்த அற்புதமான பாடல்களை மாணிக்கவாசகர் ஏன் பாடினார் என்பதும் அதன் சிறப்பும் புரிந்து கொள்ள முடியும். சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாட்ட (அபிஷேகம் செய்ய) வாசனைத் திரவியங்களை உரலில் இட்டு இடிப்பதற்காகப் பெண்களை அழைப்பதாக அமைந்த அந்தப்பாடல்களில் சிவபெருமானின் பெருமையும் கூறப்படுகிறது. கூடவே மாணிக்கவாசகரின் பக்திப் பெருக்கையும் கற்பனைத் திறனையும் நாம் உணர முடியும். இதனைச் சரியாக அறிந்து கொள்ளாதவர்கள், இது மரணச் சடங்கின் இறுதியில் பாடுவதற்கான பாடல் என்று நினைக்கிறார்கள். அந்த அறியாமையைப் போக்க, சிவன்கோயிலில் நடைபெறும் ஆருத்திரா தரிசனத்தை மக்கள் பார்ப்பது அவசியமாகும்.

- தவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணம் காட்டும் 'சைவ சமயச் சாரம்'

## கந்தபுராணச் சிந்தனைகள்

Dr க சிவலோகநாதன்

சைவசமயத்தின் சாரத்தைப் பல நூல்கள் பலவாறாகச் சொல்கின்றன. கந்தபுராணத்திலே சைவசமயத்தின் சாராம்சம் காசிபமுனிவர் தம் பிள்ளைகளுக்கு உபதேசிப்பதுபோல் சொல்லப்படுகிறது. முதலிலே, பெரியோர்களால் ஆராய்ந்து உணரத்தக்க பொருள்கள் மூன்று உள்ளன. அவையாவன: பழமையானதும் பெருமை பொருந்தியதுமான பதி, நிறைந்த உயிர்க்கூட்டம் (பசு), அவற்றைப் பிணிக்கும் பாசம் என்பனவாகும். இவற்றை வேதங்கள் கூறும்.

சான்றவர் ஆய்ந்திடத் தக்க வாம்பொருள்
மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன
ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த் தொகை
வான்றிகழ் தளையென வகுப்பர் அன்னவே

- காசினுபதேசப் படலம் 3

இவற்றிலே படைத்தலும் காத்தலும் அழித்தலும் மெய்யுணர்வொழித்தலும் பேரருள் புரிதலும் ஆகிய ஐந்து தொழில்களையும் செய்கின்ற சிவபெருமான் பதியாவார் என்று வேதங்கள் உரைக்கின்றன. உயிர்கள் அளவில்லாதவை. இவை ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று வகையான பந்தங்களினால் பாசங்களில் அமிழ்ந்துள்ளன. இவை நல்வினை தீவினைகளை அநுபவிக்க ஓய்வின்றி ஓழிவின்றி முறை முறையாகப் பிறந்து இறக்கும். இவை பூமியிலும் பிறக்கும்; பூமியைச் சூழ்ந்த கடலிலும் பிறக்கும்; தீயிலும் காற்றிலும் வானத்திலும் பிறக்கும். அவை விலங்கு, பறவை, தாவரம் என்ற பலவிதமான பிறப்புக்களையும் எடுக்கும். இவ்வுயிர்கள் சிவத்துடன் இரண்டறக் கலத்தல் முத்தி எனப்படும்.

அறம் என்று சொல்லப்படும் பொருளொன்று உண்டு. அது குற்றமற்ற பேரின்பத்தை எளிதாகத் தரவல்லது. அது அருமையாகக் கிடைக்கும் பொருளாகும். அது ஒருவழிப்பட்ட மனத்தவர்க்கே கிடைக்கும். அறத்தைப் போற்றிவந்தால் அன்பானது சேரும். அருள் என்ற குழந்தையும் அணையும். அவர்களைத் தவமான சிறப்புச் சேரும். அது வருமானால் மனத்தெளிவு உற்ற உயிர் சிவத்தைச் சேரும்.

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்துமேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சேருமால்

- காசிபனுபதேசப் படலம் 13

சிவத்தை அடையும்போது பிறவி நீங்கும். அநாதியாய்ச் சார்ந்துள்ள பந்தங்களான ஆணவம் கன்மம் மாயை என்பனவும் நீங்கும். விலகுவதற்கரிய பரமானந்தத்தை உயிர் அநுபவிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனாலேயே ஆற்றலை உண்டாக்குவது சிறந்த தவமே அல்லாது வேறொன்று உள்ளது என்று சொல்லலாகுமோ? அத்தவம் சொல்வதற்கரிய சிவகதியைத் தருவதால் தவத்தையே போற்ற வேண்டும். அத்தவமானது பிறவியை நீக்கி மேலான வீடுபேற்றைத் தந்து தலைமையைத் தரும். இது மாத்திரம் அல்லாது இப்பிறவியில் வேண்டப்படும் இன்பங்களையும் மனத்தில் நினைத்தவாறு தரும்.

அத்தவம் பிறவியை அகற்றி மேதகு
முத்தியை நல்கியே முதன்மை யாக்குறும்
இத்துணை யன்றியே யிம்மை இன்பமும்
உய்த்திடும் உளந்தனில் உன்னுந் தன்மையே

- காசிபனுபதேசப் படலம் 16

ஆதலாற் பலகாலம் அருமையாகச் செய்த தவமானது இம்மையின்பத்தையும் மறுமையின்பத்தையும் அளிப்பதற்குக் காரணமாகும். அத்தவம் மனம் ஒருவழிப்படலைக் கொடுக்கும். பெருந்தவத்தைச் செய்து சித்திபெற்றதன் மேல் அரிதான முத்திப் பேற்றைப் பெற்றவர் சிலர். செல்வம் பொருந்திய யோகங்களில் சேர்பவர் சிலர். இந்த இரண்டு பொருள்களையும் ஒருங்கே பெற்றவர் சிலர். தேவர்களாகி மேலே விளங்கும் பதவிகள் தோறும் உள்ளவர் எல்லோரும் தம் உடல் வருந்தப் பலகாலம் தவம் செய்தவர்களே. இவ்வாறாகச் சிவத்தன்மையை அடையவும் சிவத்தைச் சேரவும் தர்மத்தில் தொடங்கி தவத்தினைச் செய்யவேண்டும் என்பதே சைவசமயத் தத்துவமெனக் கந்தபுராணம் சொல்லா நிற்கின்றது

# பேதியாய்? போதியாய்?

கோயில்களிலே திருமுறைகளை ஓதும்போது, பெரியபுராணத்தில் உள்ள "ஆதியாய் நடுவுமாகி" என்ற திருப்பாடலின் ஈற்றடிகள் இரண்டையும், "பேதியாய் ஏகமாகி" என்றும் "போதியாய் நிற்கும் தில்லை" என்றும் ஓதுகிறார்கள். முதல் இரண்டு வரிகளிலும் "ஆதியாய்" என்றும் "சோதியாய்" என்றும் வருவதனால் இந்தச் சொற்களும் பேதியாய், போதியாய் என்று வரும் என்பது சிலரின் ஊகம். அந்த ஊகம் தவறானது.
சரியான திருப்பாடல் இதோ:

ஆதியாய் நடுவு மாகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏக மாகிப் பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

பேதியா ஏகமாகி - தான் தோற்றுவித்த உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் அனைத்தினின்றும் வேறாகவும், ஒன்றாகவும் இருப்பவன்.

போதியா நிற்றல் - அறிவினைக் கற்பித்தல், போதித்தல்.
சொல்லா நின்றான் = சொன்னான், போகா நின்றான் =போனான், பேசா நின்றான் = பேசினான் என்பவை போலப் போதியா நின்றான் என்றால் போதித்தான் என்று பொருள்படும் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும்.

"புராணத்தைப் பிழையின்றி ஓதுவோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம் இருக்கும் இடம்




புதுவை ஆதீனம், சிதம்பரம் ஸ்ரீபாதபூஜை அம்பலத்தாடும் சுவாமிகள் திருமடம் புதுவையில் மறைந்திருக்கும் ஒரு அற்புதமான கோயில். புதுச்சேரியில் அம்பலத்தாடியார் மடம் வீதியிலுள்ள இந்த மடம் முக்கிமாக உள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரியன்று (அந்த ஒருநாள் மட்டும்) இரவு பத்தரை மணியளவில் திருவாசக ஓலைச்சுவடி இருக்கும் வெள்ளிப் பெட்டியைத் திறந்து பூஜை செய்யப்படுகிறது. அந்தப் பூஜையின்போது கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு இது ஒரு காணக்கிடைத்தற்கு அரிய காட்சியாகும்.

பல நூறு ஆண்டுகளுக்குமுன் மாணிக்கவாசகர் அருள, இறைவனே ஏடும் எழுத்தாணியும் கொண்டு திருவாசகத்தை எழுதிக் கையெழுத்து இட்டார் என்று திருவாதவூரடிகள் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த ஓலைச்சுவடி இப்பொழுது இந்த மடத்திலேதான் உள்ளது என்பது வியப்பான விஷயம். அந்த ஓலைச்சுவடியை இந்தக் கோயிலின் நிர்வாகிகள் பாதுகாத்து வருகிறார்கள்.

இக்கோயிலின் இன்னொரு சிறப்பு, நாகலிங்க சுவாமிகளின் ஜீவசமாதி இக்கோயிலின் உள்ளே அமைந்துள்ளது. அதன்மேல் நாகலிங்கம் ஒன்று காணப்படுகிறது. அருகில் லோகேஸ்வரித் தாயார் முழு உருவத்தில் எழுந்தருளியுள்ளார். இவை அனைத்தும் சேர்ந்து அந்த இடத்தையே பக்தி மயமாக்கி விடுகிறது.



தகவல்: Dr H Marie Evangeline, Assistant Professor of English (SG)
Department of Languages, Hindustan Institute of Technology and Science, Chennai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

## (ஞானசம்பந்தர் தமிழ்)

திருமதி சுகந்தி இந்துசேகரன்

சைவ சமயத்திலே சிவனின் திருவருட் துணை கொண்டு அறம் வளர்த்த சிவனடியார்களில் முக்கியமானவர்கள் அறுபத்து மூவர். இவர்கள் எப்பொழுதும் இறைவன் சிந்தனை கொண்டவர்கள்.

"எந்நிலையில் நின்றாலும், எக்கோலம் கொண்டாலும்,
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள்"

எனும் குறிக்கோளுடன் வாழ்பவர்கள். இவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார் எனும் மூவரும் (தேவார முதலிகள்) திருவாசகம் பாடிய மாணிக்கவாசகப் பெருமானும் நால்வர் பெருமக்கள் எனவும், சமய குரவர்கள் எனவும் சைவ சமயத்தினரால் போற்றி வணங்கப்படுகின்றனர். இவர்கள் தமிழ் மொழிக்காகவும், சைவசமயத்தின் பக்தி நெறிக்காகவும் அரும்பாடுபட்ட அருளாளர்கள். நால்வர் பெருமக்கள் நமது சமயத்தின் அவதார புருஷர்களாகக் கருதப்படுகின்றனர்.

இந்த வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் முருகப் பெருமானின் திரு அவதாரமாக வணங்கப்படுகிறார். இவர் சமய குரவர்களில் முதன்மையானவராகப் போற்றப்படுகிறார். தனது மூன்று வயதிலேயே உமையம்மையிடம் ஞானப்பாலுண்டு சிவஞானத்தைப் பெற்றமையால் "ஞானசம்பந்தர்" எனப் போற்றப்பட்டு, ஞானத்தின் திருவுருவாகவே போற்றி வணங்கப்படுகிறார். சிவன் பார்வதியை அம்மை அப்பராகப் போற்றி வழிபடும் மகன்மை நெறியைப் பின்பற்றி, சற்புத்திர மார்க்கத்தைப் பேணி வாழ்ந்த அருளாளர் அவர். சைவத்தையும், தமிழையும் வாழ்விப்பதற்காகவே திரு அவதாரம் செய்தார். "நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்" எனவும், "கல்லாமல் கற்றவன்" எனவும் சுந்தரரால் புகழ்ந்து போற்றப்பட்டார். தமிழையே உடம்பாகக் கொண்டார். இதனால் "தமிழ் ஆகரர்" என்று பெயர் கொண்டார். வள்ளல் பெருமான், "சைவம் தழைக்கத் தழைத்தாண்டி, ஞான சம்பந்தப் பெயர் கொண்டு அழைத்தாண்டி" என்று புகழ்ந்து பாடினார்.

தமிழ் வேதம் எனக் குறிப்பிடப்படும் பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளில் சம்பந்தர் பாடல்கள் அடங்கியுள்ளன. அவை தீந்தமிழ் பாடல்கள் மட்டுமல்ல, ஞானம் புகட்டும் தெய்விகப் பநுவல்கள். அவை "திருக்கடைக்காப்பு" எனப் போற்றப்படுகின்றன. ஞானசம்பந்தப் பெருமானின் பதிகப் பாடல்கள் கொஞ்சு தமிழில் காணப்படுகின்றன.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் மிகப்பெரிய பங்கினை வகிக்கிறது. இதனால்,"பிள்ளை பாதி, புராணம் பாதி" என்ற பழமொழி வழக்கத்தில் வந்துள்ளது. சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில்:

"வேத நெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்க"


சம்பந்தர் தோன்றினார் எனப் பாராட்டிப் பாடியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடராஜப்பெருமான் தனது திருக்கோலத்தில் ஐந்தொழில்களையும் புரிவதை உணர்த்துகிறார். சிவனருள் பெற்ற ஞானிகள் ஐந்தொழில்களையும் புரியும் வல்லமை மிக்கவர்கள். சைவத்திலே இதை நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர்.

சுவாமிகள் பல திருத்தலங்களுக்கும் சென்று இறைவனை வணங்கிப் பதிகங்கள் பாடிவரும் காலத்தில், செங்காட்டங்குடியில் வசித்து வந்த சிறுத்தொண்ட நாயனாரின் வேண்டுகோளுக்கு இணங்க, அவரது விருந்தாளியாகச் சில நாள்கள் தங்கியிருந்து அங்கு வீற்றிருக்கும் கணபதீச்சரம் எனும் பதியைத் தரிசித்துவிட்டுப் பின்பு திருமருகல் பெருமானைத் தரிசிப்பதற்காக மருகலுக்கு வருகிறார். அங்கு கோயில்கொண்டிருக்கும் மாணிக்கவண்ணர் பெருமானைத் தரிசிக்கச் செல்லும் பொழுது, கோயிலின் அருகே உள்ள சத்திரம் ஒன்றிலிருந்து யாரோ ஒரு பெண்ணின் அழுகுரல் கேட்கிறது. உடனே சுவாமிகள் கோயிலுக்குச் செல்லாது அக்குரல் கேட்ட இடத்தை நோக்கிச் செல்கிறார். அங்கே ஒரு பெண் கதறி அழுது கொண்டிருந்தாள். அருகில் சற்றுத் தூரத்தில் ஒரு இளைஞன் இறந்து கிடந்தான். இக்காட்சியைக் கண்ட சம்பந்தர், "பெண்ணே நீ யார்? நடந்தது என்ன?" வென்று விளக்கமாகக் கூறும்படி கேட்க,



அப்பெண், "அயலிலுள்ள வைப்பூர் என்பது எனது சொந்தக் கிராமம். அங்குள்ள தாமன் செட்டியார் என்பவர் என் தந்தை. நாங்கள் ஏழு பெண்கள். பாம்பு தீண்டியவர் என் மாமன். எனது தந்தை எங்களில் ஒருவரை அவருக்குத் திருமணம் செய்து தருவதாக வாக்களித்திருந்தார். ஆனால் அதைக் காப்பாற்றத் தவற-விட்டார். எனவே நான் அவரைத் திருமணம் செய்து கொள்ளும் நோக்குடன் அவரை அழைத்துக்கொண்டு இருவரும் வீட்டைவிட்டு வெளியேறி இத்தலத்துக்கு வந்தோம். இரவு நேரமாகிவிட்டதால் இந்தச் சத்திரத்தில் தங்கிவிட்டுக் காலையில் கோயிலுக்குச் செல்லலாம் என்றெண்ணி இங்கு தங்கியிருந்த போது, அவரை அரவம் தீண்டியதால் இறந்துவிட்டார்" என்று அழுத குரலில் கூறினாள். இதைக் கேட்ட சம்பந்தப் பெருமான் மருகலில் வீற்றிருக்கும் இறைவனை வேண்டி, "சடையாய் எனுமால்" என்ற திருப்பதிகத்தைப் பாடி அவ் இளைஞனை (வணிகனை) உயிர் பெற்றெழச் செய்தார். இத் திருவருட் சம்பவத்தில் இருந்து, ஆலயம் சென்று வழிபடுவதை விட, அழுதவள் கண்ணீரைத் துடைப்பது ஞானசம்பந்தர் காட்டிய சைவநெறியாகப் போற்றப்படுவதுடன், அத்திருத் தலமும் சிறப்புக்குரியதாகிறது.

இச் செய்தியைக் கேள்விப்பட்டு, சிறுத்தொண்ட நாயனார் திருஞானசம்பந்தரைத் தரிசிப்பதற்காக மருகலுக்கு வருகிறார். மீண்டும் தனது இல்லத்திற்கு வந்து தன்னுடன் சில நாள்கள் தங்கியிருக்குமாறு வேண்டுகிறார். சிறுத்தொண்டர் நாயனாருடன் உடனிருந்து மருகல் பெருமானைத் தரிசிக்கச் சம்பந்தர் செல்கிறார். அப்பொழுது சிவபெருமான், கணபதீச்சரத்தில் (திருச்செங்காட்டங்குடியில் ) வீற்றிருக்கும் அருட் திருக்காட்சியை திருமருகலிலே காட்டி அருளினார். இக்காட்சியைக் கண்டு வணங்கிய ஆளுடைய பிள்ளையார் இரண்டு திருத்தலங்களையும் இணைத்து, திருவருள் கலந்த பக்தி மேவ, அடியார் கூட்டம் புடைசூழ, கண்ணீர் அருவியாகச் சொரிய (அங்கமும் வேதமும்) எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடினார்.

இறைவனின் இத் திருவிளையாடல் காட்சியைக் கண்டு வணங்கிய சம்பந்தப்பெருமான், இறைவனே திருச்செங்காட்டங்குடியிலுள்ள அருட்காட்சியைத் திருமருகலில் காட்டி எனக்கு நீ உணர்த்த விரும்புவதுதான் என்ன? மருகலிலுள்ள மைந்த (பேராற்றல் மிக்க பரம்பொருளே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வாயாக என்பது போன்ற வினாவுரையாக இப்பாடல் அமைந்துள்ளது சிறப்பிற்குரியது. அந்தத் தேவாரப் பாடல்:

அங்கமும் வேதமும் ஓதும் நாவர்
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குல் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்த சொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர் கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. தி 1 ப 6 பா 1



வேதத்தின் உட்பொருளைக் கொண்ட ஆறு அங்கங்களையும் வேதத்தினையும் ஓதுகின்ற அந்தணர்கள் தினமும் உன் திருவடியைப் போற்றிப் பாடிப் பரவும்படியாக வழிபாடு செய்து வருகின்றவாறு அமைந்துள்ள மருகலில் வீற்றிருக்கும் பெருமானே! அங்குள்ள உயர்ந்த மாடங்களுக்கு மத்தியிலே நிலவு தவழ்வது போலக் காட்சியளிக்கின்ற அதாவது, வானளாவி உயர்ந்துள்ள மாடங்களை உடைய மருகலில் வீற்றிருக்கும் (மைந்த) ஆற்றல் மிக்க பரம்பொருளே சொல்வாயாக! என்னவென்றால், அடுத்து செங்காட்டங்குடியைப் பற்றிச் சொல்கின்றார். சிவந்த கயல் மீன்கள் நீந்தி விளையாடுகின்றதாகிய அழகிய நீர் வளம் நிறைந்ததும், செல்வச் செழிப்பும் நிறைந்ததுமாகிய செங்காட்டங்குடியில் அமர்ந்து நள்ளிருளிலே விளக்கினை ஏந்தி ஆடுகின்ற பெருமானே (கணபதீச்சரத்தில் மகிழ்ந்திருக்கின்ற பெருமானே) நீ என்ன உணர்த்த விரும்புகிறாய்? என்பது போல் இப்பாடலின் பொருள் அமைந்துள்ளது.

தொடர்ந்து திருத்தலப்பணியை மேற்கொள்ளும்படி இறைவன் தன் திருவுளக்குறிப்பை உணர்த்துவதாக ஞானசம்பந்தப்பெருமான் உணர்ந்து கொள்கிறார்.

இத்திருக்காட்சியினைகச் சேக்கிழார் பெருமான்:

மருகல் அமர்ந்து நிறைந்த கோலர்
மல்குசெங் காட்டங் குடியின் மன்னிப்
பெருகு கணபதி ஈச்ச ரத்தார்
பீடுடைக் கோலமே யாகித் தோன்ற
உருகிய காதலும் மீது பொங்க
உலகர்முன் கொள்ளும் உணர்வு நீட
அருவிகண் வார்வுறப் பாடல் உற்றார்
அங்கமும் வேதமும் என்றெ டுத்து.

பெரியபுராணம் (வம்பறா வரிவண்டு சருக்கம்) பாடல் எண்: 486
என்று சிறப்பித்துக் கூறியுள்ளார்.
இறைவன் அறிவுக்கு அறிவாக இருந்து தனது திருவுளக் குறிப்பைக் கொடுத்து நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிநடத்திக்கொண்டே இருக்கிறான் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நமக்கு அருள் செய்வதற்காகவே இறைவன் எல்லாத் திருத்தலங்களிலும் அமர்ந்திருக்கிறான். எனவே நாம் திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டும்; வாழ்வியல் பாடங்களைக் கற்றுத் தருகின்ற திருமுறைகளை ஓத வேண்டும். இப்பாடல்களிலுள்ள உட்கிடக்கைகளை உணர்ந்து கொண்டால் உண்மையான சைவர்களாக வாழலாம் என்பதும் சம்பந்தர் வாழ்க்கை மூலம் நாம் கற்றுக்கொள்ளலாம்.

இறையருள் பெறுவதற்குப் பக்தி மட்டுமே போதுமானது என்றும், எல்லோரும் இறைவன் திருவடிகளை அடையலாம் என்பதுமே நால்வர் பெருமக்கள் மூலம் இறைவன் நமக்கு உணர்த்தும் பாடமாகும்.

"உய்வைத் தரச்செய்த நால்வர் பொற்றாள் எம் உயிர்த்துணையே" என்றெண்ணி இன்பமாக வாழ்வோமாக.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# மணிவாசகர் காலம்

இது தி பி மூன்றாம் நூற்றாண்டு என்பது பலரும் ஒப்பமுடிந்த கொள்கை. அடிகள் ஏனைய மூன்று சமயகுரவர்க்கும் முற்பட்டவர் என்பதே பழைய வரலாறுகளிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது.

சில ஆண்டுகட்கு முன் சில அறிஞர்கள் திருத்தொண்டத் தொகையில் அடிகள் கூறப்படாமை, ஒன்பதாம் நூற்றாண்டில் இருந்த வரகுணனை அடிகள் திருக்கோவையார் 306, 327 ஆவது பாடல்களிற் கூறியுள்ளமை, மாயாவாதம், மும்மலம், ஆகமம் ஆகிய சொற்களை அடிகள் உபயோகித்துள்ளமை, அடிகள் அருளிய செய்யுள் வகைகள் (கோவை, சதகம், அம்மானை, விருத்தம்) ஆதியன, "கழுமலம் அதனிற் காட்சி கொடுத்தும்", "ஒரு தோழன் தொண்டருளன்" என்று அடிகள் கூறினமை சம்பந்தரையும் சுந்தரரையும் குறிக்கும் என்பனபோன்ற காரணங்கள் கூறி அடிகள் காலம் தி பி ஒன்பது அல்லது பத்தாம் நூற்றாண்டு என்கின்றனர்.

இக் காரணங்களையெல்லாம் நன்காய்ந்து, கல்லாடத்தில் அடிகள் வரலாற்றுண்மை, "குடமுழ நந்தீசனை வாசகனாகக் கொண்டார்", "நரியைக் குதிரை செய்வானும்", "அணியார் வையைத் திருக்கோட்டினின்றதோர் திறமும் தோன்றும்" என்ற அப்பர் வாக்குகள் அடிகள் வரலாற்றைக் குறிக்கின்றமை, மூன்றாம் நூற்றாண்டில் மலையாளச் செப்புப் பட்டயமொன்றில் அடிகள் இந்தியக் கிறிஸ்தவரை மீண்டும் சைவராக்கிய செய்தி கூறப்பட்டமை, அடிகள் புத்தரை வாதில் வென்றதை இலங்கையிலுள்ள மகா வமிசம் என்ற சரித்திரநூல் கூறுதல் முதலிய பல காரணங்கள் காட்டி, உயர்திருவாளர்கள் மறைமலையடிகள், கா. சுப்பிரமணியம் பிள்ளை, சி கே சுப்பிரமணிய முதலியார் ஆகிய மூன்று பேரறிஞர்களும் முறையே தங்கள் "மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்", "மாணிக்கவாசகர் சரித்திரம்", "மாணிக்கவாசகர் அல்லது நீத்தார் பெருமை" என்ற உரைநடை நூல்களிற் தாபித்துள்ளார்கள்.

அடிகள் ஏனைய மூன்று சமயகுரவர்க்கும் முற்பட்டு திபி மூன்றாம் நூற்றாண்டில் இருந்தவர் என்பதே ஆராய்ச்சியில் துலங்கும் முடிபாகும்.

நன்றி: "திருவாசகம்" - காந்தளகம் பிரசுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது வாழ்க்கை?

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகம், யாழ். பல்கலைக்கழகம்

இந்த உலகில் பல்வேறுபட்ட மனித இனங்கள் வாழ்ந்தன; இப்பொழுதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன; இனியும் வாழப் போகின்றன. மனிதன் என்பவன் விலங்குகளினின்றும் வேறுபட்டவன். அதாவது, பகுத்தறிவு உடையவன் என்று கூறுவர். ஆனால், கடந்த காலங்களிலும், தற்போதும் மனிதச் சிந்தனை என்பது பெரும்பாலும் அழிவுப் பாதையில் செயற்படுவதை அறிவோம். அழிவு என்பது பயத்தையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தும் பெரும் பாதகச் செயலாகும். மனித வாழ்வென்பது இதுதானா?

இவ்வுலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. இவற்றின் செயற்பாட்டினாலேயே உலகம் செயற்படுகின்றது. பஞ்சபூதங்கள் ஒரு நியதியின்படியே செயற்பட்டுவருகின்றன. இந்த நியதிச் சட்டத்தைச் சமயங்கள் தருமம் என்று கூறுகின்றன.

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்”

என்பது பிரபஞ்ச அறச்சட்டத்தை அறிந்து, அதை உணர்ந்து வாழ்ந்த திருவள்ளுவரின் திருவாக்காகும்; வையத்தில் வாழ்வாங்கு வாழ்தல் என்பதாகும். தற்கால மக்களில் பெரும்பான்மையினர் மோகவலைப்பட்டு வாழ்க்கையை வெறுமனே சுகபோகங்கள் அநுபவிக்கும் ஒரு செயற்பாடாகக் கருதி அதற்கான ஆயுதமாகப் பணம் தேடுவதையே தமது ஒரே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர். பணத்தைத் தேடுவதனால் மட்டும் மனிதன் நிம்மதியாக வாழ முடியுமா?

உண்மையான வாழ்க்கை என்பது மனம் நிம்மதியாகச் சாந்தி பெற்றிருத்தல். “எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி, அங்கே எனக்கோர் இடம் வேண்டும்” என்று மனிதர்கள் ஏங்குகின்றனர். ஆனால். நிம்மதி என்பது தர்மவாழ்வில்தான் உள்ளது என்பது எத்தனை பேருக்குத் தெரியும்? “தர்மம் என்றொரு பொருள் உளது” என்பது கந்தபுராணம். ஈழத்துப் பெரும் சித்தராகிய யோகர் சுவாமிகள் “தரும நெறியிற் பிசகாதே” என்றார். புத்தர் உலகுக்கு தனது வாழ்வாலும் வாக்காலும் எடுத்துக் கூறியதும் தர்மமே! பிரபஞ்ச இருப்பின் மூலவேரும் பிரபஞ்ச ஆற்றலுமாக இருப்பது தர்மம். தருமம் தலைகாக்கும் என்பது யாது? வெறும் சுயநலமான எந்தச் செயலும் அதர்மம். பொதுநலமான எந்தச் செயலும் தர்மம். மனம், வாக்கு, காயத்தினால் ஏதேனும் நாம் செய்வதாக இருந்தால் முதலில் அதை ஆராய்ந்து பார்த்து, அது பொது நலத்துக்கு இடையூறு இல்லாத வகையில் இருந்தால் மாத்திரமே செய்யப்பட வேண்டும். அதுதான் உண்மையான வாழ்க்கை.

நாம் சமயிகள் என்று கூறிக்கொள்கிறோம். ஆனால் சமயம் கூறும் தர்மத்தை அநுசரிப்பதில்லை. ஒவ்வொரு சமயமும் மூன்று அம்சங்களைக் கொண்டவை.

1. விழுமியங்கள் (அறச் செயற்பாடுகள்)
2. அடையாளங்கள்
3. சமயக் கிரியைகள் (சமய அநுட்டானங்கள்)

சமயக் கிரியைகளிலும் அடையாளங்களிலும் வேறுபட்டாலும் விழுமியப் பண்பில் எல்லாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயங்களும் ஒன்றுபடுகின்றன. தற்காலத்தில் உலகில் வளர்ந்துள்ள, அளவுக்கு மிஞ்சித் தவறாக வழிநடத்தப்பட்ட அடிப்படைவாதமும் சகிப்புத்தன்மையற்ற தன்மையும் சமயத்தைப் பின்பற்றுபவர்கள் சமயக்கிரியைகளிலும், அடையாளங்களிலும், பழக்கங்களிலும் சிக்குண்டமையே ஆகும். மனித மாண்பைப் பேணும் மனித விழுமியங்கள் மறக்கப்பட்டு வெற்றுக் கிரியைகளிலும், அடையாளங்களிலும், வழக்கங்களிலும் சிக்குண்டமையினாலேயே உலகில் அடிப்படை வாதமும் மக்களிடையே சகிப்புத்தன்மை குறைபட்டும், சண்டை சச்சரவுகள் தோன்றிப் பெரும் போர்கள் மூழுகின்றன.

மனிதனை வாழவைப்பதும் வாழ்வாக அமைவதும் மனித விழுமியங்களே. மனித விழுமியங்களின் மூலவேரான அன்பைப் பயிலுதலே வாழ்வாகும். இறைவனை அடைதல் அல்லது வாழ்வில் முழுமை பெறுதல் என்பது அன்பின் பிற்பட்டதே. சமயங்களின் சாராம்சம் அன்பினால் தொண்டாற்றிப் பேரமைதியும் பெருஞ்சாந்தியும் பெறுதலே வாழ்வின் இலட்சியாமாகும் என்பதாகும்.

பாரதியார் "அன்பென்று கொட்டு முரசே அங்கே ஆக்கமுண்டாம் என்று கொட்டு" என்பது, வாழ்வின் தாரக மந்திரம் அன்பு என்பதைப் பறை சாற்றுகின்றது. கோயில்களின் வழிபாட்டு முறைகளும் சமூகத்தில் வாழும் மக்களின் நலன்களை முன்னிட்டே சமூகத் தொண்டாற்றுவதற்காக அருளாளர்களால் ஏற்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். மனிதனைப் பண்படுத்தவும் மனித நேயச் சிந்தனைகளை வளர்க்கவும் பொதுநல உணர்வை நிலைபெறச் செய்யவும் கோயில்களும், வழிபாடுகளும் துணை செய்ய வேண்டும். உண்மையான வழிபாட்டுணர்வின் முதிர்ச்சி சமூகத்திற்கு உதவுவதே.

எனவே தான் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என ஔவை மூதாட்டி எடுத்துரைத்தாள். "ஊருக்குழைத்திடல் யோகம்" என்றார் வாழ்வின் உண்மையை உணர்ந்த பாரதியார் எனவே இயற்கையைப் போற்றி அதன் சட்டதிட்டங்களை அநுசரித்துச் சயநலம் கடந்த பரநலம் பேணும் வாழ்க்கையே உண்மையான வாழ்க்கையாகும். உலகில் நாமும் பிறரும் எல்லா உயிர்களும் இன்புற்றிருக்க தொண்டாற்றுதலே வாழ்க்கை. இதன் மூலம் உலகில் சாந்தியும் சமாதானமும் கிட்டுகின்றது. இயற்கை அன்னை தொண்டர்களால் பூரிப்படைகிறாள். தொண்டர் குலமே தொழுக்குலம்.

## இரும்பும் பாலும்

இரும்பைக் காய்ச்சவேண்டும் என்றால் எரிந்துகொண்டிருக்கிற நெருப்பிலே அப்படியே தூக்கிப் போட்டுவிடலாம். சிறிது நேரத்தில் எரிந்துகொண்டிருக்கும் நெருப்போடு இரும்பும் காய்ந்து தகதகவென ஒளிவிடத் தொடங்கும். ஆனால், பாலைக் காய்ச்சவேண்டுமானால் இரும்பைப் போட்டதுபோல அடுப்பிலே கொட்டமுடியாது. அப்படிக் கொட்டினால் பாலும் இராது; நெருப்பும் இராது. நெருப்பின் சூட்டை வாங்கி அதனிடத்தில் சாரச் செய்கின்ற பாத்திரம் ஒன்று இடையில் வேண்டும்.

அவ்வாறே உயிர் நேரே அநுபவத்தைப் பெறுவது இறைவனுடன் இணைந்து முத்தியாகிய இன்பம் பெறும்போதுதான். இரும்பு நேரே சூட்டைப் பெறுவது போன்றது அது. அப்படியின்றி நல்வினை, தீவினைகளின் பயனாகிய இன்ப துன்பத்தைப் பெறும்போது பாலுக்கும் தீக்கும் இடையிலுள்ள பாத்திரத்தைப் போன்று ஒரு சரீரம் வேண்டும்.

நன்றி: கி. வா. ஜகந்நாதன் (கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியபுராணத்தில் சைவநீதி

திரு வி கந்தவனம்

சேக்கிழார் பெருமானின் பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் கதைகளை மட்டும் கூறவில்லை. அக்கதைகளினூடாகத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறைகளையும், அவர்களது பண்பாட்டு விழுமியங்களையும், சைவசித்தாந்தக் கருத்துக்களையும் சேக்கிழார் விளக்குகின்றார். சைவ சித்தாந்தத்தின் தளம் தருமம். சிவபெருமான் எப்பொழுதும் தரும தேவதையாகிய விடை மீதிலிருந்தே அடியார்களுக்குக் காட்சி தருவது வழக்கம். தருமத்தின் உயிர் நீதி. சிவபெருமான் தாமாகவும் தமது அடியார்கள் வாயிலாகவும் தருமத்தை நிலைநாட்டக் கடைப்பிடிக்கும் நீதிக்குச் சைவநீதி என்று பெயர்.



சைவநீதியில் ஒரு சிறப்பு என்னவென்றால், அது மக்களுக்கு மட்டுமல்லாது எல்லா உயிர்களுக்குமாயிருப்பது. இதனைப் புராணத்தின் தொடக்கத்திலேயே திருவாரூர்த் திருநகரச் சிறப்பிலே வலியுறுத்துகின்றார் சேக்கிழார் பெருமான்.

பசுவுக்கு நீதி வழங்கிய மனுநீதிச் சோழன்:

திருவாரூர் சோழநாட்டின் நகரங்களில் ஒன்று. தியாகராசப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் சிறப்புடையது. இந்நகரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த மநுநீதிச்சோழன் என்னும் மன்னன் தன் ஆட்சிக்குட்பட்ட எல்லா உயிர்களையும் கண்போன்று பாதுகாத்து வந்தான் அவனது அரண்மனை வாயிலிலே ஓர் ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்தது. அந்த மணியை அடித்துக் குறைகுற்றங்களை மன்னனுக்கு யாராயினும் எந்த நேரத்திலாயினும் தெரிவிக்கலாம் என்ற நிலையிருந்தும் அதனை அடிக்கும் தேவை எவருக்கும் ஏற்படவில்லை. அந்த அளவுக்கு நீதி வழுவா நெறிமுறை சார்ந்த ஆட்சியே நாட்டில் நிலவி வந்தது.

ஆயினும் ஒருநாளும் ஒலிக்காத அந்த மணி ஒருநாள் ஒலித்தது. மன்னன் திகைத்தெழுந்தான். மணியை மக்கள் எவரும் அடிக்கவில்லை. ஒரு பசு நீதி கேட்டு அடித்திருக்கிறது . பசுவின் கன்று இறந்துவிட்டது. இறப்புக்குக் காரணம் வேறுயாருமல்லர், மன்னனின் ஒரே மகன் வீதிவிடங்கனே!. விடயத்தை விசாரித்து அறிந்த வித்துவ அமைச்சர் ஒருவர் மன்னனுக்குச் செய்தியை இவ்வாறு விளக்குகின்றார்:

> "வளவ! நின் புதல்வன் ஆங்கோர் மணி நெடுந்தேர் மேல் ஏறி
> அளவில் தேர்த் தானை சூழ அரசுலாந் தெருவில் போங்கால்
> இளைய ஆன் கன்று தேர்க்கால் இடைப்புகுந்து இறந்ததாகத்
> தளர்வுறும் இத்தாய் வந்து விளைத்தது இத்தன்மை" என்றான்.

இவ்விதம் தெரிவிக்கின்ற பொழுது, வீதிவிடங்கனிற் குற்றமில்லை என்கின்ற தொனியில் அமைச்சர் பேசுகின்றார். "உனது மைந்தன் பெரிய தேரிலே தனக்குரிய தெருவிலே சென்றான். அவனுக்குரிய காவற் படையும் அவனைச் சூழ்ந்து சென்றது. அப்பொழுது ஆன் கன்று ஒன்று வழிமாறி வந்து தேர்ச் சில்லுகளிற்கிடையிற் புகுந்து இறந்துவிட்டது. அதனாற் கவலையுற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய்ப்பசு வந்து மணியை அடித்தது" என்கிறார் அமைச்சர். இருப்பினும் எல்லா உயிர்களுக்கும் சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல நீதி வழங்கும் மநுநீதிச் சோழன் மற்றோர் அமைச்சரை நோக்கி, பசுக்கன்று எந்தவகையில் இறந்ததோ, அந்த வகையில் தேர்ச் சில்லால் நெரித்துத் தன் மகனைக் கொல்லுமாறு கட்டளையிட்டான். கட்டளையை நிறைவேற்ற மனமில்லாத அந்த அமைச்சர் தன் உயிரை மாய்த்துக் கொள்கிறார். அதனை அறிந்த மன்னன் தானே மகன்மீது தேரைச் செலுத்தி முறையிட்ட பசுவுக்கு நீதி வழங்குகின்றான். அப்படிச் செய்கின்றபொழுது குற்றவாளி தனது மகன் என்றோ, தனக்கு ஒரேயொரு மகனே உள்ளான் என்றோ மன்னன் கருதவில்லை; பந்த பாசத்துக்கு இடமளிக்கவில்லை. முறைசெய்து காப்பாற்றும் மன்னவனின் திறத்தைச் சேக்கிழார் இவ்விதம் வியந்துரைக்கின்றார்:

ஒருமைந்தன் தன்குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செய்கை கடன்என்று தன்மைந்தன்
மருமந்தன் தேர் ஆழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோமற்(று) எளிதோதான்.

இவ்வித நீதியோடு நாயன்மார்களின் வரலாறுகளைச் சொல்லத் தொடங்கும் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர்களாக விளங்கிய பிற மன்னர்களின் நீதிவழுவா நெறிமுறைகளையும் ஆங்காங்கு விவரிக்கின்றார்.

பகைவனுக்கு அருளிய மெய்ப்பொருள் நாயனார்:

மெய்ப்பொருள் நாயனார் சேதி நன்னாட்டு வேந்தர் பெருமான். "அரசியல் நெறியின் வந்த அறநெறி வழாமல்" குடிகளைக் காத்தவர். அடியவர் திருவேடத்தையே மெய்ப்பொருள் எனக் கொண்டு சிவதொண்டு புரிந்தவர். அவரை எதிர்த்துநின்று வெல்ல முடியாத முத்தநாதன் என்ற பகையரசன் பொய்யாகச் சிவனடியார் வேடந்தாங்கிக் கொல்கின்றான். அப்பொழுது குற்றுயிராகக் கிடந்த மன்னன் "தத்தா! அவர் நம்மவர். ஒன்றுஞ் செய்யாதே!" என்று தடுக்கின்றார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. நாட்டின் எல்லைவரை முத்தநாதனைப் பாதுகாப்பாகக் கொண்டுசென்று விடவேண்டும் என்றும் பணிக்கின்றார். தத்தனும் அவ்விதமே செய்து, மீண்டு வந்து பகைவனைப் பாதுகாப்பாக அனுப்பிய விவரத்தைக் குற்றுயிராய்க் கிடந்த மன்னனுக்குத் தெரிவிக்கின்றான். அந்த நல்ல செய்தியைக் கேட்டு மகிழ்ந்த மன்னர் தத்தனைப் பாராட்டிச் சிவனது திருவடிகளைச் சிந்தை செய்து உயிர் துறக்கின்றார்.

குற்றஞ் செய்த குடிமகனைக் கும்பிட்ட கோமான்:

மற்றுமொரு நிகழ்வு கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த புகழ்ச்சோழ நாயனார் காலத்தில் நடந்தது, நீராடிய பின் வீதிவழி வந்துகொண்டிருந்த அவரது பட்டத்து யானை சிவகாமியாண்டார் என்ற தொண்டர் கோயிலுக்குக் கொண்டு சென்ற பூக்கூடையைத் தட்டி விழுத்திவிடுகின்றது. "சிவபெருமானே! உனது வழிபாட்டுக்குக் கொண்டுவந்த மலர்களை இந்த யானை சிந்தலாமா?" என்று ஓலமிட்டு முறையிடுகின்றார் தொண்டர். அவரது ஓலம் அடியவர்களின் ஆபத்துக்கு உதவும் எறிபத்தர் செவிகளில் ஏறுகின்றது. எறிபத்தர் சிவப்பணிக்கு இடையூறு விளைத்த யானையையும் எதிர்த்த பாகர்களையும் தனது மழுப்படையாற் கொன்று விடுகின்றார்.

செய்தியை அறிந்த புகழ்ச்சோழ நாயனார் சினங்கொண்டு சேனைகளுடன் யானை கொல்லப்பட்ட இடத்தை அடைகின்றார். அங்கே மழுவேந்தி நிற்கும் எறிபத்தர்தான் யானையையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகர்களையும் கொன்றார் என்பதை அறிந்து மன்னரின் கோபந் தணிகிறது. எறிபத்தர் சிவபக்தர். யானை ஏதோ பிழை செய்திருக்க வேண்டும். அதனாலே தான் அவர் அதனைக் கொன்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்.
“தேவரீருக்கு யானை செய்த தீங்கை அறியேன்” என்கிறார். எறிபத்தர் நடந்ததைக் கூறுகின்றார். அதனைக் கேட்ட புகழ்ச்சோழர், “இறைவனுக்கும் அவன் அடியாருக்கும் இழைத்த குற்றத்துக்குத் தாங்கள் அளித்த தண்டனை போதாது. எனது ஆட்சியில் நடந்த குற்றத்துக்கு நானும் உடந்தையாவேன். என்னையும் தாங்கள் கொல்லவேண்டும்” என்று கூறித்தனது உடைவாளைக் கொடுக்கின்றார்.

வெந்தழல் சுடர்வாள் நீட்டும் வேந்தனை நோக்கிக் கெட்டேன்
அந்தமில் புகழான் அன்புக்(கு) அளவின்மை கண்டேன் என்று
தந்தவாள் வாங்க மாட்டார் தன்னைத்தான் துறக்கும் என்று
சிந்தையால் உணர்வுற் றஞ்சி வாங்கினார் தீங்கு தீர்ப்பார்.

வாளை வாங்காது போனால் மன்னன் தன்னையே அந்த வாளால் கொல்லக்கூடும் என்று அஞ்சி எறிபத்தர் வாளை வாங்குகின்றார். பின்னர், “இத்தகைய சிவபகதருக்கா தீங்கு செய்தேன்” என்று வருந்தி அவ்வாளால் அவர் தன்னை அறுக்க முயன்றபோது மன்னர் அவர் கையைத் தடுக்கின்றார். அவ்வளவில் சிவபெருமான் திருவருளால் இறந்தவர் யாவரும் எழுகின்றனர்.

பண்டாரத் திருடரைக் கொண்டாடிய பண்பாளர்:

குடிமகன் ஒருவன் செய்த குற்றத்தைக் குணமாகக் கொள்ளும் நீதிக்கு மற்றுமோர் உதாரணம் இடங்கழி நாயனார் ஆட்சியில் இடம்பெற்றிருக்கின்றது. இடங்கழி நாயனார் கோனாடு என்னும் வளநாட்டை ஆண்டுவருங் காலத்தில் சிவனடியார்களுக்குத் திருவமுது வழங்குவதை நியமமாகக் கொண்ட தொண்டர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒருமுறை அமுது செய்வதற்குரிய பொருள்கள் எங்குங் கிடைக்கவில்லை. வேறு வழியில்லாது அந்நாட்டு மன்னர் இடங்கழியாரது களஞ்சிய அறையில் இரவிற் புகுந்து நெல்லைத் திருடினார். காவற்காரர் அவரைப் பிடித்து அரசன்முன் நிறுத்தினர். விசாரித்தபோது “சிவனடியார்களுக்கு உணவளிக்கும் எனது பணி முட்டுப் பட்டமையாலே இவ்வாறு செய்ய நேர்ந்தது” என்றார் அந்தத் தொண்டர். அதனைக் கேட்ட இடங்கழி நாயனார், “இவரன்றோ எனக்குப் பண்டாரமாவார்” எனவுருகி அடியவரை விடுதலை செய்ததோடன்றி எல்லாப் பண்டாரங்களிலிருந்தும் வேண்டியவற்றை மக்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று கட்டளையையும் பிறப்பித்தார்.

சைவத்திற் சாதிபேதம் கிடையாது:

இவ்விதமாகத் திருத்தொண்டர் புராணத்தில் சைவநெறிநின்ற அரசர்களின் நீதிவழுவா நெறிமுறைகளை எடுத்துக்காட்டும் சேக்கிழார் பெருமான் சமூக நீதியையும் தெளிவுபடுத்தத் தவறவில்லை.அவர் நிலைநாட்ட முனையும் சமூகநீதிகளுள் மிகவும் முக்கியமானது சைவத்தில் சாதிபேதம் இல்லை என்பது.

ஆதித் தமிழகத்தில் சாதிப்பிரிவுகள் இருக்கவில்லை. ஆரியர் வருகையால் தமிழர் மத்தியில் அவை படிப்படியாக வளர்ந்து நாயன்மார் காலத்தில் பொது வழக்காகி இருந்தன. எனினும் நாயன்மார்கள் சாதிவேறுபாடுகளுக்கு அடிமையாகவில்லை. அவர்கள் வெவ்வேறு குலத்தவராயினும் எல்லோரும் எல்லாரையும் சமனாகவே மதித்து நடந்தனர். ஒரு நல்ல உதாரணம் திருஞானசம்பந்தர் - திருநீலகண்ட யாழ்ப்பாணர் உறவு. திருஞானசம்பந்தர் அந்தண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தவர். யாழ்ப்பாணர் பிறப்பால் தீண்டத்தகாதவர் என்று கருதப்பட்டவர், முதற் சந்திப்பிலேயே சம்பந்தர்,

“அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி - ஐயர்நீர்
உளம்மகிழ இங்கணைந்த உறுதியுடையோம்” என்றே

மிகுந்த மதிப்போடு யாழ்ப்பாணரை வரவேற்கின்றார்.

பின்னரும் யாழ்ப்பாணரை விளிக்கின்றபோதெல்லாம் “ஐயரே!” என்று மதிப்பாக அழைப்பதே சம்பந்தரின் வழக்கம் என்றும் சேக்கிழார் கூறுகின்றார்.

சொல்லளவிலன்றிச் செயலளவிலும் சம்பந்தர் தனது சமரச மனப்பான்மையை நடைமுறைப்படுத்தி இருக்கின்றார். தமது பாடல்களுக்கு இசை அமைக்கும் பொறுப்பை யாழ்ப்பாணருக்கு வழங்கித் தாம் செல்லுமிடமெல்லாம் யாழ்ப்பாணரையும் அவரது மனைவியாரையும் அழைத்துச் செல்கின்றார். கோயில்களுக்குள் அவர்கள் சம்பந்தருடன் சென்று வந்ததை மற்றைய அந்தணர்களும் ஏற்றுக் கொண்டனர் என்பதையும் கவனித்தல் வேண்டும்.

மேலும் திருநாளைப் போவாரைத் தில்லைவாழ் அந்தணரும் “ஐயர்” என்று அழைத்தனர் எனக் கூறிச் சைவ சமூகத்தில் தாழ்ச்சி உயர்ச்சி பார்க்கலாகாது என்ற உன்னத கருத்தைச் சேக்கிழார் பெருமான் வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

சுந்தரமூர்த்திநாயனார் திருமணம் மிகவும் புரட்சிகரமானது. சிவவேதியர் குலத்திலே அவதரித்த அவர் முதலிலே மணந்து கொண்டது பரத்தையர் குலத்துப் பரவையாரை. பின்னர் திருமணஞ் செய்தது வேளாளர் குலத்திலே பிறந்த சங்கிலியாரை.

திருத்தொண்டர்கள் “பூசு நீறு போல் உள்ளும் புனிதர்கள்”, “கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்”. அவர்கள் போலிகளை எதிர்த்தவர்கள்; உண்மையை நிலைநாட்டப் போராடியவர்கள்; மக்களை மதித்தவர்கள்; சமுதாய ஏற்றத் தாழ்வுகளை எதிர்த்தவர்கள்.

அவர்கள் வாழ்க்கையிற் கடைப்பிடித்த நீதிக்குப் புராணத்தில் முதன்மை இடந்தருகின்றார் சேக்கிழார் பெருமான். அவரது வாக்கால் நாம் அறியக் கிடக்கும் நீதியே சைவநீதி. சைவநீதியை “மேன்மைகொள் சைவநீதி” என்று போற்றுகிறார் கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார்.

வான்முகில் வழாஅது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்!

## கொடிமரம்

திருவிழாக் காலத்திலே கோயிலுக்குப் போனால், கொடிமரத்திலே ஒரு சீலை சுற்றியிருப்பதைக் காணலாம். சீலையிலே ஒரு பசு எழுதப்பட்டிருக்கின்றது. அந்தச் சீலையோடு ஒரு தர்ப்பைக் கயிறு சேர்ந்திருக்கிறது. கொடிமரம் சிவம் என்றும், பசு எழுதப்பட்ட சீலை ஆன்மா என்றும் தர்ப்பைக் கயிறு பாசம் என்றும் சிவாகமம் சொல்லுகின்றது.

நன்றி: சைவபோதம் 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடிப்பிறப்பும் ஆடிக்கூழும்

செல்வி விக்னேஸ்வரி கந்தசாமிஐயர்
விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

சூரியன் வடக்கு நோக்கிய உத்தராயண பயணத்தில் தைப்பொங்கல் விழாவும், தெற்கு நோக்கிய தெட்சணாணய பயணத்தில் ஆடிப்பிறப்பு விழாவும் தமிழ் மக்களால் கொண்டாடப்படுகின்றன. சூரியனைப் பொங்கலாலும் கூழாலும் தமிழர்கள் ஆராதனை செய்கிறார்கள்.

தமிழர் பண்பாட்டிலே "கூழ் அடுதல்" எனும் தொடர் பரணி இலக்கியத்தினூடாக அறியப் படுகிறது. மூன்றாம் குலோத்துங்க மன்னனின் சேனைத்தளபதியாக கருணாகரத் தொண்டைமான் கலிங்கத்துப் போரிலே படை பொருது. வெற்றிவாகை சூடுகிறான். அப்போர்க்களத்தில் வெற்றிக்களிப்பைக் கொண்டாடும் வகையில் பேய்க்கணங்கள் "கூழ்" அட்டுக் கூட்டங் கூட்டமாகக் குடித்துக் கூடிக் களிப்பதை கலிங்கத்துப் பரணி நகைச்சுவைபடச் சித்திரித்துக் காட்டுகிறது. பரணி இலக்கியம் கூறும் "கூழ் அடுதல்" நிகழ்ச்சி வெற்றியின் சின்னமாக, கூட்டு நிகழ்வின் அறிகுறியாக விருந்துபசாரத்தின் பாங்கில் நிகழ்கிறது.

விழாக் கொண்டாடப் பணந் தேவை. பணமற்றவனுக்கு விழா வேதனையாகவே முடிந்துவிடும். ஆயினும் ஒருவன் ஏழையாயினும் கூழ் குடிக்குமளவுக்குப் பாக்கியம் பெற்றிருப்பான் என்பதில் ஐயமில்லை. ஆதலினாலே ஏழை - பணக்காரன் என்ற பேதமின்றி யாவரும் ஒருநாள் தத்தம் வசதிக்கேற்ப, கூழ் அட்டு உறவுகளுடன் உண்டு களியாட்டு நடத்தும் விழாவாக ஆடிப்பிறப்பும் ஆடிக்கூழ் விழாவும் அமைந்துள்ளன.

முன்னைய காலங்களில் தமிழகத்திலும் ஈழத்திலும் இவ்விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்துள்ளது. ஈழமக்கள் இவ்விழாவை கோயில்களிலும், இல்லங்களிலும் கொண்டாடி வந்துள்ளார்கள். ஆடிமாதம் பூரணைதினத்தில் கோயில்களில் கூழ் காய்ச்சிப் படைத்து அடியார்கள், அன்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் கூழ்கொடுத்து உண்டு களிக்கும் மரபு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிக அண்மைக்காலம் வரை இடம்பெற்று வந்துள்ளது. கிழக்கு மாகாணங்களில், குறிப்பாகப் பிள்ளையார் கோயில்களில் ஆடிக்கூழ் காய்ச்சும் வைபவம் நடைபெற்று வந்தமையை ஈண்டு சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும். சோமசுந்தரப்புலவர் பாடிய "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் மூலம் புலவர் காலத்திலேயே ஆடிப்பிறப்பு ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடப்பட்டமையை அறியக்கூடியதாகவுள்ளது.

பனங்கட்டி, பயறு, தேங்காய்ப்பால், அரிசிமா என்பன சேர்த்துக் கூழ் காய்ச்சப்படும். அத்துடன் கொழுக்கட்டையும் அவித்தெடுக்கப்படும். இவற்றுடன் முக்கனிகளும் சேர்த்துக் கொள்ளப்படும். ஆடிமாதத்தைக் கனத்த மாதமாகக் கூறுவது மரபு. திருமணம், புதுமனைபுகுதல் முதலான மங்கல கருமங்கள் இம்மாதத்தில் தவிர்க்கப்படும். பிதுர்களுக்குரிய மாதமாகவும் ஆடிமாதம் கொள்ளப்படுகிறது. பிதுர்களுக்குரிய திசை தெற்கு. ஆடிமாதத்தில் சூரியன் தென்திசை நோக்கி நகர்கிறான். இக்காரணங்களால் இக்கோட்பாடு தோற்றம் பெற்றிருக்கலாம். ஆதலால், இறந்தோருக்குரியதான "மாசியம்", பிதுர்க்கடன்கள் இம்மாதத்திலேதான் நடத்தப்படுகின்றன. மக்கள் மத்தியில் சமத்துவ, சம உணவு, விழா உணர்ச்சி ஆகிய அம்சங்களைத் தன்னகத்திலே கொண்ட பண்பாட்டுப் பாரம்பரியம் மிக்க ஆடிப்பிறப்பு நிகழ்வையும் ஆடிக்கூழ் உணவையும் நாம் மீண்டும் மீண்டும் நினைவு படுத்துதல் அவசியமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆலயமும் இசையும்



“அரிது அரிது மானுடராகப் பிறத்தலரிது” என்கிறார் ஔவைப்பாட்டி. அரிதிலும் அரிதான மனித ஜனனத்தை எடுத்துள்ள மண்ணவர்கள், தாம் இப்பாரினிலே செழிப்புற்று வாழ்வதற்கு விண்ணவர்களைத் தொழுவதற்கான ஆலயங்களை அமைத்து ஆண்டாண்டு தோறும் வகை வகையாக விழாக்களை எடுத்து வழிபட்டு வருகின்றனர். “விழா” என்றதுமே நம் மனதில் பளீரென ஒரு எண்ணம் தங்கு தடையின்றி வந்துவிடுகின்றது அல்லவா? ஆம் விழா என்றாலே நாதஸ்வரம், தவில், சங்கு, தேவாரம், கீர்த்தனை, வேத மந்திரங்கள், சல்லாரி என்று அடுக்கடுக்காக நம் சிந்தையில் சிந்தனைகள் வந்து விடுகின்றன. அந்தளவிற்கு இசையானது ஆலயங்களோடு “ஊனும் உயிரும்” போல நீங்கா இடம் பிடித்துவிட்டது.

“கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டா!” என்பது ஆன்றோர் வாக்கு. அதிகாலையிலே ஒவ்வொரு இல்லங்களிலும் ஆலயங்களில் ஒலிக்கின்ற “திருப்பள்ளி எழுச்சி”யே இன்பத்தேனைத் தெளிக்கின்ற அலாரம் கடிகாரமாகத் துயிலெழுப்பி விடுகின்றது. தன் துக்கத்தை இறைவனுக்குக் கூற ஆலயம் செல்கின்ற மானுடன், ஆலயத்திற்குச் சென்றதும் பல இசைகளின் தாக்கத்தினால் தன் துன்பத்தை மறந்து, இன்பத்தேனில் திளைக்கின்றான். இத் தருணத்தில், வருந்தும் ஓர் உயிருக்கு இசை ஒரு மருந்தாக மாறிவிடுகின்றது. இறை வழிபாட்டில், இசைக்கு இருக்கும் இடத்தினை வேறு எதனைக் கொண்டும் நிரப்ப இயலாது.

ஆலயங்களிலே வேத மந்திரங்கள் ஒருவித இசை அலைகளை ஏற்படுத்துகின்றன. இதனாலேயே “சுருதி” என்று இதனை அழைக்கவும் காரணமாக அமைந்துவிடுகிறது. கடவுள் வழிபாட்டின் போது இசையும் மந்திரமும் சேர்த்து ஆண்டவன் அவையில் சமர்ப்பித்தல் என்பது தொன்றுதொட்டே நம் முன்னோர்கள் நடைமுறைப்படுத்தி வருகின்ற மரபாகும்.



“குன்றாம் சிறுகுடி கிளையுடன் மகிழ்ந்து தொண்டகச் சிறுபறைக் குரவை அயர” என்று திருமுருகாற்றுப்படை செப்பி நிற்கிறது. அதாவது சிறு ஊரிலே இருக்கின்ற சுற்றத்தாருடன் கூடி “தொண்டகம்” எனும் சிறிய பறை இசைக்கருவியை இசைத்து முருகப் பெருமான் முன்னிலையில் குரவைக்கூத்து ஆடினர் என்பதே இதன் பொருள். இதன்படி இசையும் ஆலய வழிபாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பது ஐயமின்றிப் புலனாகின்றது.

பண்டைய காலங்களில் அதிகாலையில் “காந்தாரப்” பண்ணையும் பின்னர் “சாடவம்” எனும் பண்ணையும், உச்சிக்காலத்தில் “நட்டராகம்” எனும் பண்ணையும் பாடியதாக ஆகமங்கள் கூறுகின்றன. “இசையின் பயனே இறைவன் தானே!” எனும் கூற்றுக்கு அமைவாக வீணை வாசிக்கும் கலைமகள், குழல் ஊதும் கண்ணன், உடுக்கை ஏந்திய சிவன், மிருதங்கம் வாசிக்கும் நந்திகேசர், தம்புரா ஏந்திய நாரதர் என்று கடவுளர்களாலேயே இசையை மீட்டச் செய்து அடிமையாக்கி விட்டன. ஆலயமும் அங்கு ஒலிக்கும் இசையும். “வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விளங்க .....” என்று, வேத நெறியானது தழைத்தோங்கிட சைவத்துறை விளங்க இறையருளால் திருஞானசம்பந்தர் அவதரித்தார் என்று சேக்கிழார்பெருமான் “பெரியபுராணத்தில்”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியருளியது பலரும் அறிந்ததொன்றே. “இசையால் வசமாகா இதயம் எது, இறைவனே இசை வடிவம் எனும் பொழுது” என்ற பாடலே இசை இறை வழிபாட்டோடு இணைந்த புதுமையைக் காட்டிவருகிறது.

சைவ வைணவ ஆலயங்கள் எதுவாக இருந்தாலும் பிரதானமாக இசை இசைக்கப்படுகிறது. பூஜை வேளைகளிலே காலையில் தொடங்கியது முதல் இடையில் நடைபெறும் பூஜை முதற்கொண்டு நிறைவாக நடைபெறும் அர்த்த ஜாமப் பூசை வரைக்கும் இசைமரபு என்பது ஆலயங்களில் உண்டு. இசையைக் கேட்பதற்குப் பகவான் பிரியப்படுகிறான். ஓதுவா மூர்த்திகளும், இசை வாணர்களும், இசைக்கருவிகளும் ஆலயப் பூஜையை மாலை, தோரண அலங்காரங்களோடு மேலும் அலங்கரித்து வருகின்றன.

புராண, இதிகாசத் தல வரலாறுகள் இசையோடு தொடர்புடையதாகவே தெய்வங்களை சித்திரிக்கின்றன. இசைக்கு “புகழ்” என்ற பொருள் இருப்பதனால் ஆலயங்களிலே பகவானின் புகழினை இசையோடு பாடுவதனையே முறையாகக் கருதுகின்றனர்.

தமிழர்களின் இசைப் பொற்காலமாக கருதப்பட்ட காலமே தேவாரகாலம். சைவம் இசையோடு வளர்ந்ததொன்றே என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துமில்லை. திருவிழாக்காலங்களில் எம்பெருமான் வீதி உலா வருவதற்கு முன்னதாக பகவானுக்குப் பிரியமான “பஞ்சபுராணம், திருப்புகழ்” இசைத்ததன் பின்னதாகவே பெருமான் ராஜாதிராஜனாக, நாதஸ்வரத்தோடு தவில் முழங்க வீதி உலா வருகின்றான் என்பதைக் கூவுகின்ற கொம்புகளாக சங்குகள் குரல் எழுப்ப ஓதுவார்களால் கீதங்கள், கீர்த்தனைகள், தோத்திரங்கள் இசைக்கப்பட அடியார்களுக்கு இசையோடு இணைந்தவனாக இறைவன் காட்சி கொடுக்கின்றான்.

இவ்வாறான கல்தோன்றா மண்தோன்றாக் காலத்திலே தோற்றம் பெற்றுவிட்ட ஆலய வழிபாடும் இசையும் தற்போதைய காலம் வரையிலும் “தேனும் அதன் நறுஞ்சுவையும் போல” ஒன்றாகப் பின்னிப் பிணைந்தே காணப்படுகின்றன.

காராளசிங்கம் நிக்ஷாயினி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## தெல்லிப்பழை - பன்னாலை - மயிலையம்பதி

# அருள்மிகு சாமுண்டிகாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவர் ஆலய

**கிரியை ஆரம்பம்**
தைத் திங்கள் 15ம் நாள்
29.01.2024
திங்கட்கிழமை
காலை 8.29 மணி

## புனருத்தாரண அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ
# மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**கும்பாபிஷேகம்**
தைத் திங்கள் 17ம் நாள்
31.01.2024
புதன்கிழமை
காலை 9.21-10.33 மணி

மெய்யடியார்களே,

விராட்புருடனது இடை நாடியானதும், சைவத்தமிழ் வீர இராவண மன்னனால் செங்கோலாச்சப்பட்டதுமான ஈழமணித் திருநாட்டில், வடபால் பஞ்ச ஈஸ்வரத்தின் நகுலேஸ்வரத்தைத் தன்னகத்தே கொண்டதும், மா, பலா, தெங்கு. நாவல், மாண்புழ வாழை, வெள்வில் நாபுலம் சூழ் யாழ்ப்பாணம் தெல்/பன்னாலைமயிலையம்பதியில்கோயில் கொண்டெழுந்தருனி தம்மடியார் மும்மல முவ்வினைகளையும் அகற்றி வேண்டத்தக்கதருளி நல்லருள் பாலித்தருளும் கருணாகர மூர்த்தியாம் சாமுண்டிகா சக்தி உடனுறை ஸ்ரீ ஞான வைரவப் பெருமானுக்கும் ஏனைய பிள்ளையார், முருகன் ஆகிய பரிவார மூர்த்திகட்கும் கரம் குவிவார் ஒய்குவிக்கும் சோபகிருது வருடம்தைத்திங்கள் 17ம் நாள் 31.01.2024 புதன்கிழமை காலை 9.21 மணிமுதல் 10.33 மணிவரையுள்ள மீன லக்கினமும், அத்த நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் புனருத்தாரண அஷ்ட பந்தன பஞ்சகுண்டபக்ஷ கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி விழா நடைபெற அருள்மிகு ஞான வைரவப் பெருமானின் திருவருள் கைகூடியுள்ளமையினால் மெய்யடியார்கள் அனைவரையும் மேற்படி புனித நிகழ்விலும் கிரியாகால நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு எம்பெருமானின் திருவருளுக்குப் பாத்திரமாகும்வண்ணம் வேண்டுகின்றோம்.

### தைத்திங்கள் 15ம் நாள் திங்கட்கிழமை 29.01.2024

காலை 8.29 மணிமுதல் உள்ள சுபவேளையில் கருமாரம்பம், விக்கினேஸ்வர அனுக்கை, மூர்த்தி அனுக்கை, புண்ணியாகவாசனம், திரவ்வியசுத்தி விபாகம், பத்திரிகா படனம், கணபதி ஹோமம், பேரீதாடனம், நவக்கிரக ஹோமம், வாஸ்து ஹோமம், கோபூஜை, வாசம், கங்கா பூஜை, சூரிய அக்கினி சங்கிரகணம், யந்திர பூஜை.

மாலை 4.00 மணிக்கு: கிராம சாந்தி, பிரவேச பலி, இரட்சோக்கின ஹோமம், திசா ஹோமம், மிருத் சங்கிரகணம், க்ஷ கோமம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம், பிரசன்னா அபிஷேகம், கடஸ்தாபனம், கலாகர்ஷணம், குண்ட மண்டல வேதிகாஸ்தாபனம், யாக துவஜாரோகணம், கும்பங்கள் யாகசாலப்பிரவேசம், பஞ்சகுண்ட அக்கினி விபர்சனம், யாகபூஜை, புதிய மூர்த்திகள் அதிவாசக் கிரியைகள், யந்திர பூஜை, ஸ்தூபி, தீப யந்திர பிம்ப ஸ்தாபனம், அஷ்ட பந்தனம், யாக தீபாராதனை, வேத திராவிட தோத்திர பாராயணம், பிரதட்சண நமஸ்காரம், ஆச்சாரிய உபசாரம், விபூதிப் பிரசாதம் வழங்கல்.

### தைத்திங்கள் 16ம் நாள் செவ்வாய்க்கிழமை 30.01.2024

காலை 7.00 மணிக்கு விசேட சாந்தி பூஜை, புண்ணியாகவாசனம், தையாபியங்கம் (எண்ணெய்க்காப்பு), யாக பூஜை, பாவனாபிஷேகம், காயத்திரி ஹோமம், பூரணாகுதி, வேத தோத்திர பாராயணம்.

மாலை 4.00 மணிக்கு: விசேச சாந்தி பூஜை, யாக பூஜை, மூமைந்திர ஹோமம், திரிசதி ஹோமம், விசேச திரவிய ஹோமம், பிம்பசுத்தி, மூர்த்திகள் ரக்ஷாபந்தனம், ஷடத்துவநியாசம்.

### தைத்திங்கள் 17ம் நாள் புதன்கிழமை 31.01.2024

காலை 6.00 மணிக்கு விசேட சந்தி பூஜை, புண்ணியாகவாசனம், யாக பூஜை, மஹா பூரணாகுதி, வேத தோத்திர பாராயணம்.
பகல் 9.21 மணிமுதல் 10.33 மணிவரையுள்ள மீன லக்கின சுபமுகூர்த்த வேளையில் சல்வ மங்கள வாத்தியங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம்.

மாலை 5.30 மணிக்கு: சாயரட்கைஷப் பூஜை, வசந்தமண்டப பூஜை, சுவாமி திருவீதியுலா வருதல், சண்டேஸ்வர பூஜை, திருவருட் பிரசாதம் வழங்கல்.

## எண்ணெய்க் காப்பு

**30-01-2024 செவ்வாய்க்கிழமை 7.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை அடியவர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும்.**

இங்ஙனம்,
அமரர் திரு.வ.இ.பத்மநாதன் குடும்பத்தினர் , திரு.வ.இ.இராமநாதன் குடும்பத்தினர், திரு.வ.இ.லோகநாதன் குடும்பத்தினர் மற்றும் திருப்பணிச் சபையினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவயோகம்
SIVAYOGAM
(Charity Reg No: 1050398 Since: 1995)



இந்து கலாசார மையம்

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

128, Aurelia Road, Croydon CRO 3BF. Tel: 020 8767 9881









சைவப் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மனைப் பிரார்த்திக்கின்றோம். அம்பாளின் அருளாலும், அடியார்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்கு ஆலயம் அமைப்பதற்கான இடம் "சிவயோகம்" அறக்கட்டளைக்குச் சொந்தமாக வாங்கப்பட்டுள்ளபோதிலும் பணப் பற்றாக்குறை காரணமாக ஆலயம் அமைக்கும் பணி தாமதமாகிறது. அம்பாளுக்கு ஆலயம் அமைக்கும் வேலையைத் துரிதப்படுத்துவதற்கு அடியார்கள் தங்களால் ஆன உதவியைச் செய்யுமாறு தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாகப் பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம்.

வங்கிக் கணக்கு விபரம் Name: SIVAYOGAM BUILDING FUND | Account No: 20057541 | Sort Code:- 20 21 78| Bank: BARCLAYS

நன்றி

ஆலய நிர்வாகத்தினர்

Muththumari Amman Temple Sivayogam




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"Ammanai Saran Addainthal Athika Varam Peralam"

**SHRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST**

Founded on 10-08- 1991 Charity No: 1014409

5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835/020 8840 0485

www.ammanealing.org Email: info@ammanealing.org

## அம்பிகையின் திருவருளை பெற

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த குழந்தைகள் மற்றும் ஆதரவற்ற முதியவர்களுக்கு

# அன்னதானம் செய்ய அரிய வாய்ப்பு




உங்கள், குழந்தைகள் மற்றும் பெற்றோர்களின்
பிறந்தநாள், திருமணநாள், நினைவு நாள் மற்றும்
உங்கள் இல்ல சிறப்பு விழா தினங்களில்

**அன்னதானம் செய்யலாம்...**

உங்களின் £100 பங்களிப்பு
பல பேரின் வயிறு நிரம்பி மனம் குளிரும்....
இப்புனிதப் பணியில் கைகோர்க்கும் அடியவர்களுக்கு
உதவுவதற்கு தயாராக இருக்கின்றோம்.
(அன்னதானம் கொடுக்கும் நிகழ்வு தின
புகைப்படம் மற்றும் காணொளி உங்களுக்கு கொடுக்கப்படும்)

**YOU CAN CONTRIBUTE FOOD**

**DONATION £100** NO ADMINISTRATION CHARGES

**to Orphanages or Elders Home in Sri Lanka**

on Your Birthday, Wedding Day
Remembrance Day
or Any Other Special Function




**We will be providing Photos & Video of the event to you**

**Bank Details: SKTA Temple Trust**

**LLOYDS BANK | SORT CODE: 30-98-91 | ACCOUNT NO: 06905358**

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்**

**Please donate as much as you can!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

## விசேட நாள்கள்

### ஜனவரி (17-01-2024) தொடக்கம் ஏப்பிரில் (20-04-2024) வரை

| | | |
|---|---|---|
| *17.01.2024* | புதன் | 5ஆம் ஆண்டு நிறைவு அபிஷேகம் |
| *23.01.2024* | திங்கள் | பிரதோஷம் |
| *25.01.2024* | வியாழன் | தைப்பூசம் |
| *07.02.2024* | புதன் | பிரதோஷம் |
| *09.02.2024* | வெள்ளி | அபிராமிப்பட்டர் விழா |
| *21.02.2024* | புதன் | பிரதோஷம் |
| *22.02.2024* | வியாழன் | நடேசர் அபிஷேகம் |
| *08.03.2024* | வெள்ளி | மகாசிவராத்திரி, பிரதோஷம் |
| *21.03.2024* | வியாழன் | யோகர் சுவாமி குருபூசை |
| *22.03.2024* | வெள்ளி | பிரதோஷம் |
| *24.03.2024* | ஞாயிறு | பங்குனி உத்தரம் |
| *28.03.2024* | வியாழன் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| *06.04.2024* | சனி | பிரதோஷம் |
| *09.04.2024* | செவ்வாய் | வசந்த நவராத்திரி ஆரம்பம் |
| *13.04.2024* | சனி | குரோதி வருஷப்பிறப்பு |
| *18.04.2024* | வியாழன் | வசந்த நவராத்திரி நிறைவு |
| *20.04.2024* | சனி | பிரதோஷம் |
| *23.04.2024* | செவ்வாய் | சித்திரைப் பௌர்ணமி |
| *01.05.2024* | புதன் | நடேசர் அபிஷேகம் |

பிரதோஷ காலத்தில் ஆலயத்தில் விசேஷ பூசை, வழிபாடுகள் நடைபெறுகின்றன.

கோயில் திறந்திருக்கும் நேரம்:

*காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை*
*மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை*

ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத் திருவருள் பெற்று உய்யுமாறு அடியார்களைப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

***"Community Service Through Saiva (Hindu) Concern"***

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| *giftaid it* | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SAIVA SCHOOL OF HINDUISM

(By late S. Shivapadasundaram B.A)

Hinduism is a group of religions which accept the authority of the Vedas. Each member of the group has an authority of its own, which the Vedas supplement, and in the light of which they are interpreted.

The most important members of this group are Saivaism, Vaishnavaism, and Shaktaism, whose additional authorities are respectively the Siva Agamas, the Pancharatra and the Shakta Agamas. They derive their names from Siva, Vishnu, and Shakti. In spite of their akinness, they differ widely in their philosophy and ceremonials. Of these three religions, Saivaism has the largest number of followers both in India and in Sri Lanka. In its orthodox form it is found in South India, Sri Lanka, Kashmeer and Nepal. Shaktaism is concentrated in Bengal, the capital of which, Calcutta, is named after Kali, a name of Shakti.

As regards the age of Saivaism, it is as difficult of discovery as the age of the multiplication table. The Saiva religion, as well as other philosophical religions, contains truths which are discovered from time to time by men capable of finding them out. The truths of Saivaism are discovered by Siva Gnanis (Saints), who may appear in this world at any time. But it may be mentioned that reference is made to Saivaism and to the Sivagamas in the Mahabharata, which is believed to have been written in the sixth century B.C.

There are archaeological evidence to show that there was Siva worship in the Indus valley five thousand years ago, though there is nothing to show that it was Agamic. Sir John Marshall, from the examination of the statuettes and seals(1) found in the ruins of Mahenjo-daro, and his colleague, Dr. Pran Nath, from the inscriptions(2), have, independent of each other, arrived at the conclusion that Siva worship had been prevalent there.



[Pashu Pathi seal found in Mahenjo-Daro]

The chief characteristic of the religions of India is the scientific basis of their philosophy and observances. Each religion starts with facts obtained from experience and proceeds to build up its philosophy. Of these, Saivaism or Saiva Siddhanta, as it is technically called, is pre-eminently scientific, and the most modern scientific theories of the West find their counterparts in it:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• The postulate of Saiva religion is the law of universal causation, which is the very Foundation of Western Science.

• Saivaism is able to accept biological evolution, as it posits the evolution of the whole material universe and of the souls themselves. The Agamic meaning of the word “Maya” is that which involves and evolves, and that of “Linga,” the Saiva symbol of God, is that which causes involution and evolution.

• In the region of ethics, Saivaism naturally upholds determinism, regards wrong-doing as mere weakness, as something which deserves kind and sympathetic treatment instead of abhorrence or hatred.

• In psychology, Saivaism has no place for faculties, but divides mental activities into cognition (Buddhi), volition (Ahankara), and apprehension (Manas).

• Coming to physics, it regards substances only as aggregates of qualities, and derives all mental and material products alike from the same three qualities,ie, sentience, motion, and inertness, thus making mind and matter at bottom the same.

• Its conception of God is that of a Supreme Being which, far from being anthropomorphic or meddling with the universe from time to time, causes the evolution and the involution of the universe by means of agencies(3) in the universe itself, resembling in this respect the motion of the wheels and hands of a watch that had been wound.

• Religion is not regarded as an external authority based on revelations, but as an urge in living beings which leads them to their ultimate goal of perfection.

The word “religion” is used in the forthcoming articles as the equivalent of the word “Samaya,” which literally means that which leads to union. In fact, almost all theistic religions profess to take their followers to God. Religion must therefore be a power, and not a lifeless bundle of doctrines and practices to be accepted or rejected according to the tastes of the follower.

Saivaism regards the Love of God as religion itself, because it alone has the power to take a soul to God. The word ‘religion’, however, is commonly used in the sense of ‘Matha’, ie. doctrines. But mere doctrines are not of much consequence to the evolution of the soul, and the view that all religions are different paths to the ultimate goal is as untenable as the belief of the bigot that his religion alone can take a soul to God, since it is the capacity of the soul that counts and not the guidance given by books.

The authoritative works on Saivaism are the twenty eight Sivagamas, which are all in Sanskrit. The truths “contained in these books are believed to have come to saintly persons by spiritual illumination. The style is so terse and the meaning so abstruse that the philosophical portions of these works could not be understood without extensive commentaries. A chapter(4) of the Raurava Agama called Siva Gnana Bodham, and



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

consisting of twelve couplets, said to have been revealed to the great Saiva saint, Nandi, as the essence of the Agamas, was translated into Tamil in the twelfth century by Meikandar, who also added to it a commentary. This was expanded by his disciple Arulnandi in his Siva Gnana Siddhiar. Siva Gnana Munivar, a great scholar who lived in the latter part of the seventeenth century, wrote an extensive commentary on Siva Gnana Bodham, which covers four hundred pages of folio in print. He and four others have written commentaries on Siva Gnana Siddhiar. There are also some original works in Tamil on Saivaism, such as the Thirumanthiram of Thirumular, who is said to have flourished in the first century of the Christian era.

These articles (which will be serialised in Kalasam) are largely based on Siva Gnana Bodham and Siva Gnana Siddhiar. The Agamic method of proceeding from facts of experience(5) to general principles has been followed here as much as possible. The purpose of this work is to present the side of Saivaism which has a direct bearing on daily life.

(To be continued)

(1) "Among the many revelations that Mahenjo-daro and Harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivaism has a his tory going back to the Chalcolithic age or perhaps even further still, and that it takes its place as the most ancient living faith in the world" (Mahenjo-daro and the Indus Civilization, Preface, p. vii).

(2) "The cults of Siva and the mother-Goddess had already been shown to be very old. It is interesting to find them current as far back as 3000 B.C." (The Scripts of the Indus Valley Seals, p. 25).

(3) Like Kéla and Niyati; wherever mention is made in these articlesese articles, of God's Love doing anything, it is as the ultimate agent and not as the imme diate cause.

(4) Twelfth chapter of the seventy-third section (Papa Vimochana Padalam) of the Agama.

(5) In Saiva philosophy, experience includes yogic vision obtained by spiritual il lumination.

Compiled by S Atputhananthan

## Why Temples?

Electrical energy is everywhere, but in order to bring it to our daily use, we need to have generators to channel that energy and transmission systems to distribute it at the place where we need it. In the same way, in order to get the grace of the omnipresent Lord, we have to build temples, where we can focus the power of the Lord in a consecrated idol for our benefit in an easy way.

- Maha Periyavar of Kanchi Mut.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாஞ்சாலி சபதம்



பாஞ்சாலத்தரசன் தவமிருந்து பெற்ற செல்வத் திருமகள் பாஞ்சாலி. திருமகளை ஒத்த தன் மகளுக்குத் திருமண வயது வந்ததும் அவளுக்கு வரவிருக்கும் மணவாளன் தன்னிகரற்ற தலை சிறந்த வீரனாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான். தகுந்த ஒரு வீரனைத் தேர்ந்தெடுக்க கடினமான ஒரு போட்டியை வைத்துப் பிறநாட்டு அரசர்களை வரவழைத்தான். அங்கு பாண்டவரும், மாறு வேடத்தில் (பிராமணர் வேடத்தில்) வந்திருந்தனர். அதில் அருச்சுனனால் மட்டுமே வெற்றியீட்டிப் பாஞ்சாலியைப் பெற முடிந்தது. அத்தகைய பெருமைக்குரிய மெய்த்தவப் பாஞ்சாலியைச் சூதாட்டத்தில் பணயமாக வைக்க அறக்கோமகன் சம்மதித்ததுமே கெட்ட மாமனான சகுனி மற்றெல்லாவற்றையும் வென்றது போலவே ஒரு நொடியில் வென்றெடுத்தான்.

வீரமற்ற சூழ்ச்சி மிகு வஞ்சகச் சகுனி தன் மாயச் சூதினுக்கு அறநெறி வழி நின்ற வீரத் திருமகனாகிய தர்மரை வலிய அழைத்து வசப்படுத்தி பாண்டவரிடமிருந்த அனைத்தையும் அபகரித்தது மட்டுமன்றி உலகவழக்குக்கு மாறாக அவர்கள் ஐவரையும் பணயமாக வைக்கச் செய்து அடிமையாக்கிய பின்பும் அதிர்ஷ்டம் மிக்க அவர்கள் தேவியை வைத்தால் மீண்டவற்றையெல்லாம் பெற்று நீங்கள் மகிழ்வுடன் நாடு திரும்பலாம் என ஆசைகாட்டி மோசஞ் செய்து மனைவியையும் வென்றெடுத்துத் துரியோதனனுக்குத் தான் கொடுத்த வாக்குப்படி ("இன்று தருகுவன் வெற்றியே") அதனை நிறைவேற்றினான்.

இதைக்கண்டு அதர்மத்தின் உச்சக் கட்டத்திலிருந்த துரியோதனன் சபையிலிருந்த துட்டர் கூட்டமெல்லாம் துள்ளிக்குதித்தாடியதைப் பாரதியார் பின்வருமாறு விமர்சிக்கிறார்.

"திக்குக் குலுங்கிடவே - எழுந்தாடுமாம்
தீயவர் கூட்டமெல்லாம்
தக்குத்தக் கென்றே அவர் - குதித்தாடுவார்
தம்மிரு தோள் கொட்டுவார்
ஒக்குத் தருமனுக்கே - இஃதென்பர் "ஓ!
ஓ!" என்றிரைந்திடுவார்."

அநுஜா

தாம் ஏதோ கஷ்டப்பட்டு வெற்றியீட்டியவர்கள் போல எண்ணித் தோள்களைத் தட்டி எல்லாத் திசைகளும் அதிரும் வண்ணம் கூத்தாடியதன்றி தருமருக்கு இதுதான் சரியான பாடம் என்றும் ஆர்ப்பரித்தனர். எவ்வளவு கொடிய மனம் கொண்டவர்கள்? வீரமற்ற கோழைகள். சூழ்ச்சியால் வெற்றியீட்டித்தந்த மாமனைக் கட்டியணைத்து மாலைகள் போட்டு அவனைத் தூக்கி வைத்துக் கொண்டாடினர்.

"சேமத் திரவியங்கள் - பல நாடுகள்
சேர்ந்ததி லொன்றுமில்லை;
காமத் திரவியமாம் - இந்தப் பெண்ணையும்
கைவசமாகச் செய்தான்;
மாமனோர் தெய்வ மென்பார் - துரியோதனன்
வாழ்க என்றார்த்திடுவார்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்குக் கிடைத்த எல்லாச் செல்வத்தையும்விடப் பாஞ்சாலியையும் பெற்றுத்தந்த மாமன் ஒரு தெய்வமல்லவா? என்று பாராட்டியதுடன் இவ்வளவையும் பெற்ற துரியோதனன் வாழ்க என்று வாழ்த்துக் கூறியது அந்தத் தீயவர் கூட்டம்.

துரியோதனனுக்குச் சிறுவயதிலிருந்தே பாண்டவர் மீது பொறாமை ஏற்பட்டிருந்தது. ஏனென்றால் அவர்களைப் போல தன்னால் எதுவுமே செய்ய முடியவில்லையே என்ற ஆற்றாமை, அதனால் ஏற்பட்ட பகை உணர்வு அவர்களை எப்படியாவது சூழ்ச்சியால் அழிக்க வேண்டும் என்று பெருமுயற்சி செய்தான். ஆனால், எதுவுமே பலனளிக்கவில்லை. அதற்குப் பதிலாக அவர்களை அழிக்கும் எண்ணம் மனதில் வளர்ந்து கொண்டு போய் உச்சநிலை அடைந்த போது, மனமுடைந்து செய்வதறியாது மாமன் உதவியை நாடினான். வீரத்தால், தந்திரத்தால் பாண்டவரை வெல்ல முடியாது என்றுணர்ந்த சகுனி, தனக்குத் தெரிந்த சூதாட்டத்தில் பாண்டவரை மட்டுமன்றித் துரியோதனன் எண்ணியதற்கும் மேலாக பாஞ்சாலியும் கிடைத்ததால் அவன் கரைகடந்த மகிழ்ச்சியுற்றான். சூதாடியும் வெல்லத் தெரியாதவன் துரியோதனன். தனக்குக் கிடைத்த பெரும்பேற்றை, எண்ணிப்பார்க்க முடியாத வெற்றியைக் கண்டு அவன் மனதில் மகிழ்ச்சி பொங்கியது. அதனைப் பாரதியார் கூறும் விதமே அழகு. மாமனைக் கட்டியணைத்து,

“என்துயர் தீர்த்தாயடா! - உயிர் மாமனே!
ஏளனந் தீர்த்துவிட்டாய்
அன்று நகைத்தாளடா! - உயிர் மாமனே!
அவளை என் ஆளாக்கி னாய்
என்றும் மறவேனடா! - உயிர் மாமனே!
என்ன கைம்மாறு செய்வேன்?”. என்று ஆரம்பித்து இறுதியில்

“நாச மடைந்த தடா - நெடு நாட்பகை
நாமினி வாழ்ந்தோ மடா!
பேசவுந் தோன்று தில்லை - உயிர் மாமனே
பேரின்பங் கூட்டிவிட்டாய்”

என்று சொல்லி மலை போன்ற பெரும் உருவங்கொண்ட துரியோதனன் துள்ளிக் குதித்து ஆடினான். அந்தச் சபையிலுள்ளோர் ஆடிய ஆட்டத்தை எனது பாட்டிலே வர்ணிப்பது இலகுவானதல்ல என்ற பாரதியார் அந்தப்பாடலை,

“அன்று புரிந்த தெல்லாம் - என்தன் பாட்டிலே
ஆக்கல் எளிதாகுமோ?”

என்று முடிக்கிறார். “பாட்டுக்கொரு புலவ”னான பாரதியால் முடியாததல்ல. அந்தக் கேவலமான காட்சியை அவர் பாட விரும்பவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.

மேற்பட்ட நிகழ்ச்சியால் உலகில் ஏற்பட்ட குழப்பத்தைப் பாரதியார் தன் மனக் கண்ணால் கண்டு தன் மனதில் ஏற்பட்ட வேதனையை அடுத்து வரும் பாடல்களில் வர்ணிக்கிறார்.

“தருமம் அழிவெய்தச் சத்தியமும் பொய்யாக
பெருமைத் தவங்கள் பெயர்கெட்டு மண்ணாக......”

என்று ஆரம்பித்துத் தேவர்கள் வயிறு பற்றி எரிய மோனத்திலிருந்த முனிவர்கள் மயங்க, வேதம் பொருளற்றுப் போக, கந்தருவர், சித்தர் போன்றோர் பைத்தியர்களாக, பிரம்மா, விஷ்ணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைகுலைய, நாமகள் புத்திகெட, திருமகள் தன் சிவந்த முகம் கறுப்பாக, மகாதேவரின் யோகநிலை மயங்கிவிட, வாலை, உமாதேவி, மாகாளி, மூல மாசக்தி சூலத்தை கையிலேந்தினாள், உலகில் ஆக்கம் அழிவு புதுமையெலாம் தன்னகத்தே கொண்ட ஆதிபராசக்தி நெஞ்சம் கோபத்தால் வன்மையுற, உலகத்தைப் பிரகாசிக்கச் செய்கின்ற சூரியனின் முகத்தில் ஒளிக்குப் பதிலாக இருள் படர, உலகையே உலுக்கிவிட்டது. எல்லாம் தன் நிலைகுலைந்து தடுமாறின.

இந்நிலையில் துரியோதனனின் மனத்தே அஞ்ஞான இருள்படர, சூரியகுலத்திற்குப் பொருந்தாதவனாகி, விடுக்கென்று எழுந்து நின்று மரியாதைக்குரிய சித்தப்பா விதுரனைப் பார்த்து "என்ன விதுரா யோசித்துக் கொண்டிருக்கிறாய்? உடனே போய் வில்போன்ற வளைந்த நெற்றியுடைய பேரெழில் மிக்க பாஞ்சாலியை, முன்பு பாஞ்சாலத்தரசன் உயிர் போன்றவளை, இன்று நாம் சூதில் வென்ற விலைமகளை, இங்கு நடந்தவற்றையெல்லாம் விவரமாகக் கூறி உன் மைத்துனன், இப்போது உன் தலைவன் அழைத்து வரச் சொன்னான் என்று உரைத்து அழைத்து வருவாய்" என்றான்.

யாருக்கும் பொறுக்கொணாத இந்தக் கொடுஞ்சொற்களைக் கேட்ட விதுரன், "மூடமகனே! இதனால் உனக்கு வரக்கூடிய கெடுதியை அறியாமல் உனது சிற்றறிவால், சிறுமைக் குணத்தால் கூறிவிட்டாய். சிறிய மான்குட்டி தன் அறியாமையால் (புலியின் வலிமையை அறியாது) புலியைத் தாக்க முற்பட்டது போலவும், தவளை ஒரு பெரும்பாம்புடன் மோதப் புறப்பட்டது போலவும், ஐம்பெரும் வீரர்களின் மனதில் கோபக்கனலை வீணே வளர்க்கிறாய். தெய்வத் திருமகளை அவமதித்துப் பேசுகிறாய்,. உன்னுடைய நன்மைக்காகவே இந்த நீதி நெறிப்படி நடக்கும்படி சொல்கிறேன். நான் சொல்வது வேறெவரின் நன்மைக்காகவும் அல்ல, உனக்காகவே. பாண்டவர் இதற்காக ஒருநாள் உன்னைப் பழிவாங்குவார்கள். நீ உன் உயிரை இழந்து மண்ணில் வீழ்ந்து கிடப்பாய். முன்பு நல்லோர் மனத்தை நோகடித்த வேனன் என்பவன் புழுவைப் போல மாய்ந்தொழிந்தான். அதனால் நல்லோர் மனதை நோகடிக்கக் கூடாது. நேர்மையான செயலுமல்ல. இதனால் ஏற்பட்ட பாவம் அடுத்து வரும் எல்லாப் பிறப்பிலும் தொடர்ந்து வரும். தீயவர்களின் வாயிலிருந்து கொடிய வார்த்தைகள் இலகுவாக வந்துவிடும். அதைக் கேட்டவர் மனதைவிட்டு என்றுமே அகலாது. நினைக்கும் போதெல்லாம் மனதை உறுத்தும். தீயவர்களுக்கு இன்பம் ஒருபோதும் வாழ்வில் ஏற்படாது. பேராசையால் தவறாக நடக்கிறீர். இதனால் பெரும் ஆபத்து வரும். அதனால் பாண்டவரிடம் மன்னிப்புக் கேட்டு அவர்களிடம் அபகரித்தவற்றைத் திருப்பிக் கொடுத்து அவர்களின் நாட்டுக்கு அனுப்புங்கள். இப்படி உங்கள் தவறை உணர்ந்து செயற்படாவிடில் மகாபாரதப் போர் வரும். நீங்கள் யாவரும் அதில் அழிந்துவிடுவீர்கள்" என்று அறிவில் மேம்பட்டவரும் வரவிருப்பதை அறிந்தவருமான விதுரன் சொன்னார். ஆனால், "கெடுகிறேன் பந்தயம் பிடி" என்ற நிலையிலுள்ள துரியோதனன் மேலான இவ்வுரையைக் கேட்பானா? என்ன?


## திருமுருகாற்றுப்படை

முருகக் கடவுளைக் குறித்த பாடல்களோ அளவிறந்தன. அவற்றுள் தொன்மையும் தனிச்சிறப்பும் வாய்ந்தது "திருமுருகாற்றுப்படை"யே. அது அருட்சுவையோடு பொருட்சுவையும் நிறைந்தது. உயர்ந்த மந்திரம் கலந்த பல சொற்கள் உடையது. இதனால் இதனைத் தினந்தோறும் ஓதி வருபவர்கள் வேண்டிய வேண்டியாங்கு எய்திவருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் சுவாமிகள்



திரு க செல்வரத்தினம்

தாயுமானவர் தமிழ் நாட்டில், நாகபட்டினம் மாவட்டத்தில், திருமறைக்காடு என்ற (வேதாரண்யம்) என்ற இடத்தில் 17-ஆம்நூற்றாண்டில் அவதரித்தார். தந்தையார் கேடிலியப்பப் பிள்ளை, தாயார் கெசவல்லி அம்மையார்.

சுவாமிகளின் காலம் பற்றி இருவிதமான கருத்துக்கள் உண்டு. இவர் சமாதி நிலை அடைந்த பொழுது, இவரது மாணாக்கர்கள் சில பாடல்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் "துகளறு சாலி வருடம்." என்பதை ஆதாரமாகக் கொண்டு பார்த்தால் அடிகளாரின் காலம் கி.பி.1608 முதல் 1662 வரை எனப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை கூறுவர். வேறு ஆராய்ச்சியாளர் 1706 -1744 என்பர்.

தாயுமானவர் தமிழ்மொழி, வடமொழிகளில் புலமை பெற்றவர். திருச்சி மலைக் கோட்டையில் எழுந்தருளியுள்ள தாயுமானவரை வழிபட்டு வந்தார். இவர் இளமையில் சிற்றம்பலதேசிகரிடம் கல்வி பயின்றார்.

தாயுமானவர் திருச்சிராப் பள்ளி அரண்மனையில் அரச கணக்குப் பிள்ளையாகப் பணிபுரிந்துவரும் காலத்தில் அம்மனின் அருள் கிடைத்ததன் பயனாக அரச ஆவணவத்தைக் கசக்கி எறிந்து, மேலிடத்தின் வெறுப்பைச் சம்பாதித்தார். சில நாள்களின்பின்னர் பணியில் இருந்து விலகித் துறவு வாழ்வை மேற்கொண்டார்.

இறையருள் வாய்க்கப் பெற்று, திருவானைக்காவில் எழுந்தருளியருக்கும் அகிலாண்டேஸ்வரி அம்பாளின் ஆடையில் நெருப்புப் பற்றியதை வேகமாகக் கண்டு உணர்ந்து அணைத்தார். சிவாசாரியார்கள் இந்நிகழ்வைக் கண்டனர். தவநெறியில் விளங்கிய தாயுமானவர் பல் வேறு திருத்தலங்களக்குச் சென்று இறைவனை வழிபட்டார். இவர் தாயாரும் தமையனாரும் வற்புறுத்தி இவருக்குத் திருமணம் செய்து வைத்தனர். ஓர் ஆண்குழந்தை பிறந்தது. கனகசபை எனப் பெயரிட்டனர்.

இவரது பாடல்கள் திரட்டு எனும் நூலின் மொத்தம் 1452 பாடல்கள் 56 தலைப்புகளில் ஆக்கப் பட்டுள்ளன. இவரது பராபரக்கண்ணிகள் மிகவும் புகழுடையன. மெய்ப்பொருள் பற்றிய 389 கண்ணிகள் புகழ் பெற்றவை.

"அண்ட கோடிபுகழ் காவைவாழும் அகி
லாண்ட நாயகி என் அம்மையே"

என அம்பாளைப் பாடியள்ளார். இவரது பாடல்களில் உவமைகளும் பழமொழிகளும் மிகுந்து காணப்படுகின்றன.

திருஞானசம்பந்தர், சுந்தரர் போன்றவர்களுக்குத் தெய்வீக அருள் கிடைத்தது போன்று இவருக்கும் கிடைத்திருக்க வேண்டும். ஒருநாள் மலைக்கோட்டையில் அமர்ந்துள்ள இறைவன் தாயுமானவரை அடிகளார் வழிபட்டு திரும்புகையில், தனது குருவாகிய மௌனகுருவைக்கண்டு வணங்கி அவரிடம் பாடம் கற்று அருட்கவியானார். சாரமா முனிவரிடம் பல நூல்களைக் கற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்தவரெனினும் அம்பாளின் அருட் கொடையும் இவர் பெற்றிருக்க வேண்டும்.

அவரது அருள் மொழிகள் சில:

சினம் இறக்கக் கற்றாலும் சித்தியெலாம் பெற்றாலும்
மனம் இறக்கக் கல்லார்க்கு வாயேன் பராபரமே!
எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறு ஒன்று அறியேன் பராபரமே

அவர் அரசியல் பணியினின்று விலகி விராலி மலைக்குச் சென்று அங்கேசித்தர்கள் பலரைக் கண்டு அளவளாவினார். அதனால் அவரது உள்னம் சித்தாந்த செந்நெறியில் நின்றது

இவர் இறைவனிடம் கேட்ட வினாக்கள்: (பன்மாலை)

நான்நான் இங்குஎனும் அகந்தை எனக்கு ஏன் வைத்தாய்?
நல்வினைதீ வினைஎனவே நடுவே நாட்டி
ஊன்ஆரும் உடற்சுமை என்மீது ஏன் வைத்தாய்
உயிர் எனவும் என்னை ஒன்றா உள்ஏன் வைத்தாய்? பாடல் 5

இவர் எடுத்தாண்ட விடயங்கள் பல தரப்பட்டவை:
கருணாகரக் கடவுள் என்னும் தலைப்பில் அபிஷேகம், நைவேத்தியம், ஆனந்தம், திவ்யரசம், பிராணன் போன்ற வட சொற்களை அதிகமாகப் பயன்படுத்தினார். தமிழகத்தில் வடமொழிச் செல்வாக்கு கற்றோர் மத்தியில் காணக் கூடியதாய் இருந்தது. இவர் வாழ்ந்த காலத்தில் வழக்கில் உள்ள சொற்றொடர்கள், உவமைத் தொடர்கள் பலவற்றை அடிகளார் கையாண்டுள்ளார், வடமொழிக் கருத்துக்களையும் இவர் பாடல்களில் வடித்துள்ளார்.

மேலும் பரிபூராணந்தம் பற்றி, பக்திநெறி, ஐம்புலன், இயக்கம், சித்தாந்தக் கருத்துக்கள் எனச் சிந்தனை படர்ந்து அவர் தமது புலமையைப் படரவிட்டுள்ளார். ஆணவம், பாவங்கள் செய்ய காரணங்கள், இறை இயல்பு, பக்தி பற்றியும், மேலும் கிளிமூலம் தெய்வீகக் காதல் போன்ற அவரது சிந்தனைகள் ஆளமாக வானமளவு பறை சாற்றி நிற்கின்றன

சில எடுத்துக்காட்டுகள்:

"தாயினும் இனிய நின்னை சரண் அடைந்த நாயேன்"
"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி அருளொடு நிறைந்ததெது"

பராபரக்கண்ணி மொத்தம் 389 அவற்றுள் சில:

"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று
அல்லாதார் யாரோ அறியேன் பராபரமே" 192
சீர்ஆரும் தெய்வத் திருவருளாம் பூமிமுதல்
பார்ஆதி ஆண்ட பதியே பராபரமே - 1
அன்பைப் பெருக்கிஎனது ஆருயிரைக் காக்க வந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே - 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பக்கண் ணீரில் துளைந்தேற்கு உன் ஆனந்த
இன்பக் கண் ணீர்வருவது எந்நாள் பராபரமே - 39
ஈனம் தரு உடலம் என்னது யான் என்பதுஅற
ஆனந்தம் வேண்டி அலந்தேன் பதாபரமே - 20

யாக்கையைப் பழித்தல்

நீரக்குமிழி பூண் அமைத்துநின்றாலும் நில்லாமெய்
பார்க்கும் இடத்து இதன்மேல் பற்று அறுவது எந்நாளோ - 2
மும்மலச் சேற ஆன முழக் கும்பிபாகம் எனும்
இம்மலகா யத்துள் இகழ்ச்சி வைப்பது எந்நாளோ - 9

மாதர் மயக்க அறுத்தல்

காமனை வா என்று இருண்ட கண்வலையை வீசும் மின்னார்
நாமம் மறந்து அருளை நண்ணுநாள் எந்நாளோ - 4
கண்களில்வெண் பீளைகரப்பக் கருமைஇட்ட
பெண்கள் மயல் தப்பிப் பிழைக்கு நாள் எந்நாளோ -5

தத்துவ முறைமை

ஐம்பூதத்தாலே அலைக்கழிந்த தோஷம்அற -
எம்பூத நாதன் அருள் எய்து நாள் எந்நாளோ - 1
புத்திஎனும் துத்திப் பொறிஅரவின் வாய்த்தேரை
ஒத்துவிடாது எந்தைஅருள் ஓங்குநாள் எந்நாளோ - 8
ஆங்காரம் என்னும்மத யானை வாயில் கரும்பாய்
ஏங்காமல் எந்தை அருள்எய்து நாள் எந்நாளோ - 9


பொருள் இயல்பு

கை விளக்கின் பின்னே போய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய் விளக்கின் பின்னேபோய் மெய் காண்பது எந்நாளோ - 1
எள்ளுக்குள் எண்ணெய் போல் எங்கும் வியாபகமாய்
உள்ள ஒன்றை உள்ளபடி ஒரு நாள் எந்நாளோ - 9
பெண்ஆண் அலி எனவும் பேசாமல் என் அறிவின்
கண்ணூடே நின்றஒன்றைக் காணுநாள் எந்நாளோ - 18

தமிழ்நாட்டின் ஞானவழி தொன்மையானது நீண்ட காலந் தொட்டு அன்புநெறி தழைத்து அருள்நெறி பூத்துக் குலுங்குகிறது. தமிழ் மொழியில் இறை உணர்வுப் பாடல்கள் எண்ண முடியாதவை.

வள்ளலாருக்கு முன்னரே சன்மார்க்க நெறிக்கு வித்திட்டவர் தாயுமானவர். நெறி வழிபாட்டு ஒழுங்கில் பக்தியும் ஞானமும் இணைந்து செல்வதை இவர் பாடல்களில் காணலாம். இவர் கையாண்ட தத்துவக் கருத்துக்கள், தமிழ் மரபுச்சொற்றொடர்கள் தமிழ்மொழிக்கு வலு சேர்க்கின்றன. இவர் தமிழ் உணர்வுப் பெருங்கடலுக்கோர் “கலங்கரை விளக்கம்”. அவரது பாடல்களை நினைந்து நாம்பாடி நனைந்து அருள் பெற்று உய்வோமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்பரங்குன்றம்

## பயணக் கட்டுரை

சாவகச்சேரியூர் Dr க கதிர்காமநாதன்

திருப்பரங்குன்றம் = திரு + பரம் + குன்றம்
திரு - சிறப்பு, பரம் - பரம்பொருளாகிய சிவன், குன்றம் - மலைக் கோயில் - மலையைக் குடைந்து உருவாக்கிய குடைவரைக் கோயில். மலைப்பகுதி நடுவில் குன்று லிங்க வடிவில் இருப்பதால், சிவனாக - பரமனாகப் பகர்வர்.
ஆற்றுப்படை வீடுகளில், முதற்படை வீடு இதுவாகும். அவற்றுள் ஒரேயொரு குடைவரைக்கோயில். குகையில் குடியிருக்கும் குகனைக் கொண்டது. குன்றின் உயரம் 190 மீட்டர், சுற்றளவு 2 கி.மீட்டர்.


மூலவர் - சுப்பிரமணியசுவாமி, உற்சவர் - சண்முகர், அம்பாள் - தெய்வயானை
தலவிருட்சம் - கல்லத்தி, தீர்த்தம் - சரவணப்பொய்கை

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர், அருணகிரிநாதர், நக்கீரர், பாம்பன்சுவாமிகள் ஆகியோரால் பாடல் பெற்ற தலம். நக்கீரர் இங்கு வாழ்ந்து தன் இன்னலை நீக்கிய ஆறு ஆதாரங்களில் இது மூலாதாரம் ஆகும்.

தல வரலாறு :
கயிலாயத்தில் சிவபெருமான் பார்வதியாருக்கு “ஓம்”எனும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளை உபதேசித்தார். அப்பொழுது முருகன் தன் தாயாரின் மடியின் மீது அமர்ந்திருந்தார். இதனால் உபதேசத்தைக் கேட்டார். புனிதமான மந்திரப்பொருளை குரு இல்லாமல் கேட்டது பாவமாகும். இதற்குப் பரிகாரமாக முருகன் திருப்பரங்குன்று அடைந்து தவம் செய்தார். தவத்தை மெச்சி சிவன் பார்வதி சமேதராகத் தைப்பூச நாளன்று காட்சி கொடுத்தார். பாவம் நீங்கியது.

இக்கோயில் ஆறாம் (6) நூற்றாண்டில் அமைக்கப்பட்டுள்ளது. சங்ககால இலக்கியங்களாகிய அகநானூறு முருகன் குன்றம் என அழைத்தது. கலித்தொகை மாத்திரம் ஆற்றுபடைவீடுகளில் திருப்பரங்குன்றத்தைப் பற்றிக் கூறியது. தென்பரங்குன்று, பரங்குன்று, பராயி, சத்யகிரி, கந்தமலை என்றும் பெயரிடப்பட்டது.

வாருங்கள் கோயிலுக்குப் போவோம்:



இராஜ கோபுரத்தின் முன்பு வெளிமண்டபம் அல்லது சுந்தரபாண்டிய மண்டபத்தினுள் பிரவேசிக்கிறோம். நாங்கள் மாலை 4 மணிக்கு முன்னே சென்றதால், இங்கு ஏனையோரோடு இருந்து, இளைப்பாறி சுற்றாடலைப் பார்த்தோம். விசேடமான இம்மண்டபத்தில் 64 கற்தூண்கள் உள. இவற்றுள் கூத்தாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி, துர்க்கை அம்மன், வீரவாகுதேவர், திருமலைக்காட்சி போன்ற சிற்பங்களைக் காணலாம். இம்மண்டபத்தில் ஆன்மிக சொற்பொழிவுகள் போன்ற பல நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இராஜகோபுரம் - இதனை அடுத்துக் காண்கிறோம். இது திராவிட முறைப்படி அமைந்த அழகிய சிற்பங்களைக் கொண்ட 7 நிலை உடைய 46 மீட்டர் உயரமுடையது. முருகனின் வேலையும் காணலாம். இதை அடுத்துக் கல்யாண மண்டபம். இதன் கிழக்கே இலக்குமி தீர்த்தமும், மேற்கில் பிரம்மாவால் உண்டாக்கப்பட்ட பிரம்மகூபம் என்னும் சந்நியாசிக் கிணறும் உள. இப்பிரம்ம கூபத்தீர்த்தம் தீராத நோய்களைப் போக்கி நலம்பெறச் செய்யும் தன்மை உடையது.

கல்யாண மண்டபத்தின் பின்னர் கொடிமரமண்டபத்தை அடையலாம். இங்கு மயில், பெரிய நந்தி, மூஞ்சூறு ஆகிய வாகனங்களைக் காணலாம்.

மகாமண்டபத்துக்கு அடுத்துள்ள மலையைக் குடைந்து அர்த்தமண்டபத்தை அமைத்தனர். ஆறு படிகள் (இவை சடாட்சரப்படிகள்) ஏறித்தான் அர்த்தமண்டபம் அடையமுடியும். இம்மண்டபங்கள் யாவும் வெவ்வேறு உயரத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது. சுமார் 50 படிகள் ஏறிய பின்னர் தான் அர்த்தமண்டபம் அடையலாம். அர்த்தமண்டபத்தில்தான் கருவறை உள்ளது. இது ஒரு உல்லாசமான, மனதை உகந்தளிக்கும் இடமாகும்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

முருகனின் திருமணக்கோலம் - “உல்லாச நிராகுல......” - கந்தர் அநுபூதி
உல்லாச - மங்காத உள்ளங்களிப்பு

முருகன் சூரனை வென்று வெற்றிவாகை சூடியதை முன்னிட்டு இந்திரன் தனது மகளான தெய்வயானையைக் கொடுத்து மணமுடித்த இடம்.

திருமணத்திற்கே நாம் செல்வோம்.
பிரம்மா விவாக காரியங்களைக் கண்காணிக்க, சூரிய சந்திரர் இரத்ன தீபங்களைத் தாங்கிநிற்க, சிவபார்வதி பரமானந்தம் கொள்ள, இந்திரன் மகளைத் தாரை வார்த்துக் கொடுத்தது. கரு வறையில் சுப்பிரமணியர் அமர்ந்த நிலையில், வடக்கு நோக்கி, திருமணக்கோலத்தில், இடது காலை மடித்து, வலது காலைத் தொங்கவிட்டு, இடது பக்கம் தெய்வயானையையும் வலது பக்கம் திரிலோக சஞ்சாரி நாரதரை மீசையோடு அமர்த்தி இருக்கும் கல்யாணக் கோலம். திருவடியின் கீழே வாகனமாகிய யானை, ஒருபாறையில் வடிக்கப்பட்டுள்ளது. ஆறுபடை வீடுகளில் திருப்பரங்குன்றத்தில் தான் முருகன் அமர்ந்த நிலையில் இருப்பது.

இக்கருவறைக்கு விமானம் இல்லை. மலையே விமானம். சுற்றிவரப் பிரகாரமும் அமையவில்லை. சுப்பிரமணியருக்கு எண்ணெய்க்காப்பும், புனுகுமே சாத்தப்படுகிறது. அவரது வலது கரத்திலுள்ள ஞானவேலுக்கே சகல அபிடேகங்களும் நடைபெறுகின்றன. சூரனை வெற்றி கொண்டு வேலுடன் இங்கு வந்ததால் வேலுக்குத்தான முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது போலும்!

திருமணப்பிரச்சினைகள் தீரப் பக்தர்கள் திருமணக்கோல முருகனை வணங்கி, அருள்பெற்று நலமடைவர்.

சிவபெருமான் கிழக்கே பார்த்த தனிக்கருவறை. நேரே மகாவிஷ்ணு பவளக்காய்ப் பெருமாளாக மகாலட்சுமியோடு அமர்ந்த கோலம். சிவனுக்கு எதிரே நந்தியாக விஷ்ணு! அபூர்வ அமைப்பு .இதனை மால்விடைக்கோயில் என்பர்.
மால் - திருமால், விடை - நந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரிவலம்:
3 கி.மீட்டர் தூரம். ஒரு நாள் தேவை. பௌர்ணமி, கார்த்திகை போன்ற விசேட நாள்களில் மக்கள் பாதணியின்றி வலம் வருவர். கோயில்கள் பலவற்றை அணுகி, துதித்து வணங்கிச் செல்வர்.

சொக்கநாதர் கோயில் பிரதானமான முதற்கோயிலாகும். சிவபெருமான் பரங்கி நாதராகவும், பார்வதி ஆவுடைநாயகியாகவும் அழைக்கப்படுகின்றனர். இங்குதான் முருகன், “ஓம்” என்ற பிரணவத்தைக் குரு இன்றிக் கேட்டதால் வந்த தனதுபாவத்தைத் தவம் செய்து நீக்கியது.

சரவணப்பொய்கை:
பலர் நேர்த்திக்கடன் பூர்த்தி செய்யும் இடம். காது குத்துதல், மொட்டை அடித்தல் போன்றவை இங்கே நடப்பதைப் பார்க்கலாம். நக்கீரர் இங்குதான் திருமுருகாற்றுப்படை பாடினார்.

இதன் பின்னர் பத்ரகாளி, சப்த கன்னியர், கருப்பண்ணசாமி, நாக தேவதை, ஆஞ்சநேயர் போன்ற கோயில்களைத் தரிசிக்கலாம்.

அர்த்தநாரீஸ்வரர் கோயில் மிகப் பிரதானமானது. இதைத் தேசியச் சின்னமாகப் பாதுகாக்கின்றனர். இது ஒரு குகைக் கோயிலாகும்.

காசிவிஸ்வநாதர் கோயில் மலையின் உச்சியில் இருக்கின்றது. இங்குள்ள தீர்த்தம் கங்கை நதிக்கு ஒப்பானது. உடலுக்கும், உள்ளத்திற்கும் மன நிறைவை உண்டாக்க வல்லது. சித்தர் சமாதியும் இங்குள்ளது.

இவற்றைவிட பல கோயில்கள், சமாதிகள் உள. கிரிவலம் வரும்போது வெள்ளை மயில்களையும் காணலாம்.

இவ்வருடம் வைகாசி விசாக தினம் அன்று பறவைக்காவடி, புஷ்பக்காவடி, பாற்காவடி போன்றவைகளோடு ஆடி மக்கள் பெருங்கூட்டமாக வந்தனர். இவர்களைப் பன்னீர் தெளித்து வரவேற்றனர் என்ற செய்தி தினமலர் இதழில் வந்தது.

சந்ததம் பந்தத் - தொடராலே
சஞ்சலந் துஞ்சித் - திரியாதே
கந்தனென் றென்றுற் .- றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் - றிடுவேனே
தந்தியின் கொம்பைப் - புணர்வோனே
சங்கரன் பங்கிற் - சிவைபாலா
செந்திலங் கண்டிக் - கதிர்வேலா
தென்பரங் குன்றிற் - பெருமாளே.

- திருப்புகழ்

திருப்பரங்குன்றம் நகரிலிருந்து தென்மேற்கே 10 கி.மீட்டர் தூரத்தில் உளது. நகர பேருந்து வசதிகள் தாராளமாக உள்ளன. சமீப புகையிரத நிலையம், விமான நிலையம் மதுரையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Thirukkural Stories
# திருக்குறட் கதைகள்

சாவித்திரி ஆனந்தன்

## பண்புடைமை
(Courteous Manners)

அதிகாரம் :100 குறள்: 995

“நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு”

ஒருவரை இகழ்ந்து பேசுதல் விளையாட்டிலும் துன்பம் தருவதாகும். பிறருடைய இயல்பை அறிந்து நடப்பவரிடத்தில் பகைமையிலும் நல்ல பண்புகள் உள்ளன.

Insult is harmful even in jest; Just pride
resides in courtesy even to the foe.

வனவாச காலத்திலும் பூஜைகள் செய்து பாண்டவர்கள் நாள்களைப் பயனுள்ளதாகக் கழித்தார்கள் என்று மகாபாரதம் சொல்கிறது. குந்திதேவி, பாஞ்சாலி, பஞ்ச பாண்டவர் அனைவரும் தினமும் பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். பீமன் மட்டும் எப்பொழுதும் தாமதமாகவே படுக்கையிலிருந்து எழுவான். இதனால், பிரார்த்தனையின் இறுதியிலேயே வந்து கலந்து கொள்வான்.

ஒரு நாள் தருமர், “நீ யானை போலப் பலசாலிதான். ஆனாலும், பிரார்த்தனையில் ஈடுபடும் எண்ணம் இல்லாமல் இருக்கிறாயே. உனக்கு ஏன் பக்தி இல்லாமல் போயிற்று? என்று பீமனைக் கடிந்தார்.

அதன் பிறகும் பீமன் அதே போலத் தாமதமாகவே எழுந்தான்.

ஒரு நாள், கிருஷ்ணரை விருந்துக்கு அழைக்க எண்ணி, நகுலனைக் கிருஷ்ணரிடம் அனுப்பி வைத்தார் தர்மர். நகுலன் திரும்பி வந்து, “நாளை கிருஷ்ணருக்கு வேறு வேலை இருக்கிறதாம். வேறொரு நாள் வருவதாகக் கூறினார்” என்று சொன்னான்.

“நீங்களெல்லாம் கூப்பிட்டால் கிருஷ்ணர் வரமாட்டார். நான் போய் அழைத்து வருகிறேன் பாருங்கள்!” என்று கூறிய அர்ச்சுனன், தனது பக்தி மீதும், கிருஷ்ணர் தனது நண்பன் என்பதிலும் நம்பிக்கை வைத்துக் கிருஷ்ணரிடம் போனான்.

அவனிடமும் கிருஷ்ணர் அதே பதிலைச் சொன்னபோது, அர்ச்சுனன் மனம் சோர்ந்து திரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அர்ச்சுனன் அழைத்தும் கிருஷ்ணர் வரவில்லையே என்ற கவலையில் அடுத்த நாள் பூஜையில் அனைவரும் முகவாட்டத்துடன் இருந்தார்கள்.

அன்றும் தாமதமாக எழுந்து வந்த பீமன், "ஏன் எல்லோரும் கவலையுடன் இருக்கிறீர்கள்?" என்று கேட்டான். நடந்த விடயத்தைத் தர்மர் பீமனிடம் கூறினார். "நான் போய்க் கிருஷ்ணரை அழைத்து வருகிறேன்" என்று பீமன் கூற, அர்ச்சுனன் பீமனைப்பார்த்து, "நானே போய் அழைத்தும் வர முடியாத கிருஷ்ணர், நீ கூப்பிட்டதும் வந்துவிடுவாரோ?" என்று ஏளனம் செய்யும் தொனியில் கேட்டான். பீமன் எதுவும் சொல்லாமல், தனது கதாயுதம் சகிதம் புறப்பட்டான். போகுமுன், "பாஞ்சாலி! நீ விருந்து தயார் செய். கிருஷ்ணருக்கு வெள்ளித்தட்டில் சாப்பாடு எடுத்துவை". என்று கூறிவிட்டுச் சென்றான்.

சிறிது தூரம் போனபின், தனது கதாயுதத்தை வானத்தை நோக்கி வீசி எறிந்தான். "கிருஷ்ணா! என்னுடைய பக்தி உண்மை என்றால் நீ விருந்துக்கு வரவேண்டும். வராவிட்டால் என் கதாயுதம் என்மேல் விழுந்து நான் உயிரை விடுவேன்...". என்று உரக்கக் கத்தினான்.

உடனடியாகக் கிருஷ்ணர் தோன்றி, பீமனுடைய தலைக்கு மேலாக வந்து கொண்டிருந்த கதையைச் சட்டென்று பிடித்துக் கொண்டார். பீமனுடைய பக்தி அழைப்பினை ஏற்று, அவனுடன் விருந்துக்கு வரச் சம்மதித்தார். பீமனோடு கிருஷ்ணர் வருவதைக் கண்டபோது, அவனைக் கேலி செய்த அருச்சுனன் தலை குனிந்தான். பீமனுடைய பக்திதான் சிறந்தது என்பது நிரூபணம் ஆயிற்று. பீமன் தனது பக்தியைத் தம்பட்டம் அடித்துக் கொள்வதில்லை என்பதை அர்ச்சுனன் உணர்ந்தான்.

தினமும் பிரார்த்தனையில் சரிவரக் கலந்து கொள்ளாத போதும், பீமனுடைய மனம் தூய்மையாகவும், தன்னலம் அற்றதாகவும் பக்தியுடனும் இருந்தது.

The Epic Mahabharatha says pandavas, even during their jungle life, spent their days usefully by doing prayers every day. Kunthithevi, Panchali and Pancha Panadavas all took part in the prayers. Bhima woke up late every day and always joined the prayers half way after it had started.

Dharma scolded Bhima for this habit saying, 'maybe you are strong like an elephant. But, you never have an intension of joining the prayers regularly. Why you do not have faith in God?'

Even after this, Bhima did not change and continued to get up late as usual.

One day, Dharma waned to invite Lord Krishna for a lunch and sent Nagulan to invite Krishna. On retuning, Nagulan said, 'Krishna told that he had got some other work tomorrow, and he would come another day'.

'Krishna won't agree to come for a feast when you people invite him… wait and see. I will go and make him agree to come for the feast', saying this, Archuna went to Krishna's place. He strongly believed on his faith and in Krishna's friendship. But, when Krishna told the same answer to Archuna too, he came back with great disappointment.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Disturbed by this situation, all of them were very sad next day during their prayers.

As usual, on that day, Bhima joined the prayer late, he noticed everybody with sorrowful face. He asked them, 'What's the matter? Why are you all sad?'

Dharma told him what happened. 'Oh! I will go and bring Krishna for the feast' Bhima told. On hearing what Bhima said, Archuna interrupted saying, sarcastically,

'Even when I requested Krishna, he never agreed to join the feast, it's very unlikely that he will respect your invitation'.

Anyhow, Bhima got ready to go to Krishna's place with his so called weapon 'Kathayutham'. Before leaving, he asked Panchali to cook the delicious meal for Krishna and served it in a silver plate.

After walking a short distance, he threw his weapon up in the air and shouted loudly,

'Krishna! If my faith is true and genuine, you must agree and attend the feast. Otherwise let this Kathayutham fall on my head and make me die!'

Immediately Krishna appeared above and suddenly caught the weapon before it could reach Bhima's head. Also, he accepted Bhima's invitation and went along with him to their place to attend the feast.

All got surprised on seeing Krishna coming along with Bhima, especially Archuna got ashamed for he had insulted Bhima.

It has been proved that Bhima's faith become the first and topmost. Archuna realised his fault.

Even though Bhima didn't participate in the prayers regularly, it was a fact, that his heart was pure and genuine without any selfishness.

## BETTER RELATIONSHIP

After every Mistake, Most of Us say, "I am sory."

Only a few say and ask, "What should I do to Make it Right?"

This atitude Makes A Relation More Beautiful and Honest



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மிகத் துளிகள்

• மனம் என்னும் சிறையிலேயே நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

• "இனி எல்லாம் சுகமே" என எப்போதும் சொல்லிப்பழகு.

• ஏதாவது குறையோ, தடங்கலோ, தடையோ, வரும் போது இது எனக்குப் பிரசினை இல்லை என்று உணரும் போது அவன்தான் இறைவனை ஒத்துக்கொண்டவன்.

• ஒருவனுக்கு நம்பிக்கை கொடுத்தவன், தைரியம் கொடுத்தவன் இறைவனுக்கு ஒப்பானவன்.

• உனக்கு எவ்வளவு அறிவு இருந்தாலும் நான் நன்றாக இருப்பேன் என்ற நினைப்பு இல்லை என்றால் இருக்கிற நன்மையே உன்னை விட்டுப் போய்விடும்.

• நீ எவனுக்கும் தாழ்ந்தவன் இல்லை என்று உணர்வதே முதல் ஞானம்.

• வெப்பம் வாங்கிய நாக்கில் சுவை இல்லை மனதில் ஞானம் ஓங்கிய நிலையில் பயமில்லை.

• நீங்கள் எதைச் செய்தாலும் முழு விழிப்புணர்வுடன் செய்யுங்கள். இயந்திரத் தன்மையுடன் செய்யாதீர்கள்.

• மற்றவர் மனதில் புன்னகை செய்யும் வார்த்தையை உரைப்பவன் எனக்கு உகந்தவன். எனக்கு உகந்ததை நீ தினமும் செய்தால் நீயே எனக்கு உகந்தவன் ஆவாய் என்றான் இறைவன்.

• பொறுமையாக இருங்கள் தாமதங்கள் உங்கள் வாழ்வில் தரமான அற்புதங்களைக் கொண்டுவரும்.

• பொதுவாக நம் கண்ணுக்கும் கருத்துக்கும் தெரிவதென்னவோ பகட்டுத்தான். பகட்டான ஆடம்பரம் தான் மாயையைக் கொடுக்கிறது. இந்த மாயை நமக்குள் இருக்கும் வரை நமக்கு கஷ்டங்கள் என்றுமே இருக்கத்தான் செய்யும்.

• சுவாசம் உள்ளபோதே ஈசனை உன் வசம் செய்வது ஞானத்தின் உச்சம்.

• விட்டுக் கொடுப்பவன் வீணாவதில்லை, உனக்கான காலம் வரும்வரை பதற்றம் அடையாமல் இரு.

• உங்களுக்குள் வரும் எண்ணங்களையும் உணர்வுகளையும் கவனிக்கக் கூடிய சாட்சியாக மாறுங்கள். அவற்றை மனதுக்குள் உள்வாங்காதீர்கள். எந்தச் சூழ்நிலையிலும் எதிர்ப்புத் தெரிவிக்காதீர்கள்.

• இளமையில் வியர்வை சிந்தாவிட்டால், முதுமையில் கண்ணீர் சிந்த வேண்டி இருக்கும். இருக்கும் போதே ஒரு நான்கு பேரைக் காப்பாற்றும் கடவுளாக நீ வாழ்.

• உன்னிடம் நிறைய இருக்கிறது முக்கியமில்லை. நீங்கள் நிறைவாக இருக்க வேண்டும். அதுவே உனக்கு நிம்மதி தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• இனி எல்லாம் சுகமே என்று உணர்ந்த மனமே நிகழும் காலத்தில் நிம்மதி பெறும்.

• நீ நன்றாக இருப்பதற்கு உயிர் என்ற ஒன்றை உனக்கு இறைவன் கொடுத்துள்ளான். நீ கொஞ்சம் அவனோடு தனித்து இருந்து பழகு.

• இருக்கின்ற இறைவனை உன்னுள்ளே உணர்ந்தால் சந்தோஷம் மட்டும் தான் உனக்கு மிஞ்சும். யாரும் உனக்கு எதிராகவே நிற்க முடியாது.

• உன் ஆன்மாவின் யாத்திரையில் உன்னோடு யோகமாயிருப்பது உன் புன்னகையே. மற்றோரை ஞானம் இல்லை என்றாலும் நிம்மதியில் வளரச் செய்யும்.

• தத்துவங்கள் பேசுவதை நிறுத்து. உன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அறிவினைப் புகுத்து. அதுவே மெஞ்ஞானத்தின் மாறாத இலக்கணம்.

• உன்கால சாவகாசம் முடியுமுன்னே தாமதம் செய்யாமல் காலத்தை விரயம் செய்யாமல் வினை செய்ததை வீண் செய்வதற்குப் பெற்ற பிறவி இது என்று கர்மம் செய்.

• உன்னை நீ சந்தோஷமாக வைத்திராவிட்டால், நீ யாருக்குமே பிரயோசனமாக இருக்க முடியாது.

• நீ பெற்ற பெயரும், ஊர் வைத்த பெயரும், தாய் வைத்த பெயரும் உன் உயிர் பிரிந்தபின்னே பிணம் என்று இந்த உலகம் கூறும். இதை மனதால் ஞானம் கொண்டு உணர்ந்து சுவாசம் உன்வசம் உள்ள போதே ஈசனை உன்வசம் செய்யக்கடவாய். இதுவே ஞானத்தின் உச்சம்.

• நீ கஷ்டப்படுவதற்குக் காரணம் You remembering God not recognising God.

• உன்னால் முடியாது என்ற எண்ணம் உன்னோடு இருக்கும் போதும், நீ எண்ணாத நன்மையை உனக்குக் கொண்டு சேர்ப்பவன் ஈசன். ஆனால், நீ அவனோடு இருப்பது உன் முதற்கடமை. அதுவே யாமிருக்கப் பயமேன்.

• தன்னை அறிந்தவன் ஆசைப்பட மாட்டான், உலகை அறிந்தவன் கோபப்படமாட்டான். இந்த இரண்டையும் அறிந்தவன் கஷ்டப்படமாட்டான்.

• அதிகமாகப் பேசுவதை நிறுத்திக்கொள். அங்கு நீ அதிகம் தேடப்படுவாய்.

• தன்னைத் தானே சரிசெய்து கொள்ளுங்கள். அதைவிட சிறந்த மாற்றம் உலகில் ஏதுமில்லை.

• நாள்தோறும் வாழ்க்கை உனக்கு வேண்டுமென்றால் வேண்டாம் என்று நிச்சயம் சொல்லிப்பழகு. அதை உன்னோடு இன்றே தொடங்கு.

• பயமும் சந்தோஷமும் சிறுநீரக நோய்களை உருவாக்கும். எரிச்சலும் கோபமும் கல்லீரல் நோய்களை உருவாக்கும். அமைதியை விரும்புவதே அனைத்தையும் குணமாக்கும்.

• நம்மில் பலர் கவலை என்று செத்த பாம்பைக் கையில் எடுத்துக் கொண்டு இருக்கின்றோம். பொறுமை இழந்தவன் சேவை செய்தும் பயனில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• மனிதர்கள் ஒவ்வொருவரும் தெய்விகத் தன்மை உடையவர்கள். ஒவ்வொரு ஆன்மாவும் அஞ்ஞான இருளினால் மூடப்பட்ட ஞான சூரியன் ஆகும்.

• வளமாம் செய்யும் உடலாம் இதை மெய்க்கொண்டு பத்திரமாய்ப் பார்க்காமல், பத்திரத்தில் சேர்ந்த உலகத்தைப் பத்திரமாய்ப் பார்ப்போருக்கு சரித்திரத்தில் நிம்மதி இல்லை.

• உன்னோடு வாழும் மனிதர்களின் வளத்தைப் பெருக்கவும் தரத்தை உயர்த்தவும் இன்முகத்தோடு பொன் பொருள் உரைக்கும் நற்சொல் கூறினால் உன்னைக் காப்பது ஈசன் என் கடமை.

• நீ பிறப்பதற்கு முன்னாலேயே சில விஷயத்தைச் செய்து வைத்து நேர்த்தியாக பூர்த்தியாக நீ அநுபவிக்கத்தான் இங்கு வந்துள்ளாய்.

• தரமும் தகுதியும் இருப்பதால்தான் நீ இந்த பரப்பிரம பீடமான பூமிக்கு வந்துள்ளாய்.

• அமைதியாகக் காத்திரு, உன் தேவையறிந்து அனைத்தும் தரப்படும். தராவிட்டால் அது உனக்குத் தேவையில்லை என்று அர்த்தம்.

• இது கடவுள் செய்த பூமி. இங்கு எல்லாமே புண்ணிய ஸ்தலம் தான்.

• நாம் வருந்துவதன் மூலம் என்றும் வாழ்க்கை எமக்கு மாறாது. நானே வினை நீயே துணை. இதுவே இறைவனின் அநுக்கிரகம்.

• நேர்த்தியாக, பூர்த்தியாக, மூர்த்தியாக உன்னைச் செய்து வைத்திருக்கிறான் ஒருத்தன், அவன் கீர்த்தியைப் பெற்று வாழ்வதே உன் வேலை.

• கடவுளை உணர்வதற்கான ஒரே வழி தியானம் புரிதல். தியானத்தின் மதிப்பறியா மனிதனிடம் ஞானத்தின் வெளிப்பாடு என்றாயினும் தடைப்பட்டே தீரும்.

• துணியாதவரை வாழ்க்கை பயம் காட்டும். துணிந்தவரை வாழ்க்கை வழி காட்டும்.

• எங்களால் எந்த அளவு பிரசினைகளைத் தாங்கிக்கொள்ள முடியுமோ அந்த அளவே பிரபஞ்சம் நமக்குச் சோதனைகளைத் தருகின்றது.

• சிக்கல்கள் ஏற்படும் போது அதனை ஒவ்வொருவரும் எப்படி எதிர்கொண்டார்கள் என்பதைப் பொறுத்தே வெற்றி அல்லது தோல்வி நிர்ணயிக்கப்படுகின்றது.

• பெருமையும், கர்வமும் இதய நோய்களை உருவாக்கும் கவலையும் துயரமும் வயிற்று நோய்களை உருவாக்கும். .

• சர்வமும் செய்த இறைவனுக்கும், இறைவனை உணரும் வலிமையையும், வல்லமையும் படைத்த உயர்ந்த பிறவியாகிய சக மனிதர்களுக்கும் இனி மிச்சம் இருக்கும் உங்கள் வாழ்நாளில் வெற்றியின் உச்சத்தை அடைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

ஆக்கியோன், சி. ராஜ்குமார் (சிவமைந்தன்)
Physiotherapist Base Hospital Point Pedro



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RUBY'S
CATERING

**020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk

| உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு |
|---|---|---|





திருமணம் - பிறந்தநாள் - பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் - விருந்து உபசாரம்
அரங்கேற்றம் - வளைகாப்பு - பெயர் சூட்டும் விழா





**ACCREDITED SRILANKAN CATERERS @**

Hilton THISTLE HOTELS Holiday Inn

*உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற*
*தரம்மிகு இலங்கை மற்றும்*
*தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......*

**Tel: 020 8799 7180**

mail@rubyscatering.co.uk | www.rubyscatering.co.uk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org